அறிவோம்
தெளிவோம்
பகிர்வோம்

பூ 2 : இதழ் 1
2024 தை - பங்குனி

ISSN 2961-5712

இலக்கணம்

காலாண்டுச் சஞ்சிகை - 5

சஞ்சிகை ஆசிரியர்: த.யுவராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம்

காலாண்டுச் சஞ்சிகை - 5

பூ 2 : இதழ் 1

2024 தை – பங்குனி

சஞ்சிகை ஆசிரியர்:

த. யுவராஜன்

முகவரி: ஆசிரியர், இலக்கணம்,
515 / 161, திருமலை வீதி,
மட்டக்களப்பு - 30000, இலங்கை.

விலை: 300.00

வெளியீட்டுத் திகதி: **22. 01. 2024**

✲ அபிராமி வெளியீடு, மட்டக்களப்பு.

❖

ILAKKANAM

Quarterly Magazine - 5

Poo 2 : Ithal 1

2024 January - March

EDITOR:

D. Juwarajan

ADDRESS: The Editor, Ilakkanam,
515 / 161, Trinco Road,
Batticaloa - 30000, Sri Lanka.

Price: LKR 300.00

Published on: 22.01.2024

✲ Abiramie Publication, Batticaloa.

மின்னஞ்சல்: djuwan58@gmail.com

கைத்தொலைபேசி: +94714496681

இச்சஞ்சிகையில் இடம்பெறும் படைப்புக்களுக்கு அவ்வப் படைப்பாளியே பொறுப்பாவார்.

முயல்வோம் – வெல்வோம்

இலக்கணத்துக்கென்று ஒரு சஞ்சிகையைக் காலாண்டுக்கு ஒருமுறையாவது வருடந்தோறும் வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் தோன்றியது; அது 22.01.2023இல் கைகூடியது. அதுதான் 'இலக்கணம்' சஞ்சிகையின் முதலாவது வெளியீடு. அதைத் தொடர்ந்து 2ஆவது (22.04.2023), 3ஆவது (22.07.2023), 4ஆவது (22.10.2023) எனக் காலாண்டுக்கு ஒருமுறை 'இலக்கணம்' சஞ்சிகை கடந்த வருடம் சீராக வெளிவந்தது. அந்தவகையில் 'இலக்கணம்' சஞ்சிகைக்கு ஓராண்டு பூர்த்தி. இது மகிழ்ச்சியைத் தருகின்றது. அவ்வாறே இவ்வருடமும் இனிவரும் வருடங்களிலும் வெளிவரும். இது சீராக வெளி வருவதற்கும் மகிழ்ச்சியைத் தருவதற்கும் காரணம் வாசகர்களாகிய உங்கள்மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கையும் 'இலக்கணம்' சஞ்சிகையின்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையுமே.

இந்தச் சஞ்சிகை 22.01.2023இல் வெளிவந்த போது 'இலக்கணம்' சஞ்சிகையின் அவசியத்தை முன்னிறுத்தி, இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி (12.02.2023), தினகரன் (12.02.2023), தினக்குரல் (19.02.2023) ஆகிய பத்திரிகைகளில் தமது அரிய கருத்துக்களை முதன் முதலில் பதிவுசெய்தவர், பேராசிரியர் தை. தனராஜ் அவர்கள். அதே போல (ஒரு வருடத்துக்குள்) வவுனியாவிலிருந்து வெளிவருவதும் திரு.ந.பார்த்தீபன் அவர்களை ஆசிரியராகக் கொண்டதுமான 'பசுமை' (மலர் 02 சித்திரை - வைகாசி 2023 இதழ் 01) தேவையானதொரு பதிவைச்செய்திருந்தது. அதனைத் தொடர்ந்து பேராசிரியர் இரா. சதாசிவம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டதும் மதுரை நான்காம் தமிழ்ச் சங்க வெளியீடாக வருவதுமான 'செந்தமிழ்' (தொகுதி 117 . பகுதி 7 - சூலை 2023) நல்லதொரு பதிவைச்செய்திருந்தது. அவ்வாறே கண்ணன் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'காலச்சுவடு' இன்னுமொருபடி மேலே சென்று சிறந்ததொரு பதிவைச்செய்திருந்தது. இவற்றுக்கப்பால் வாய் மூலம் தத்தம் பதிவுகளைச்செய்த பேராசிரியர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இலக்கணக் கட்டுரைகளைப் பயமின்றி எழுதித்தருபவர்கள், விளம்பரம் தருபவர்கள், துர்க்கா அச்சகத்தினர், வாசகர்கள், எனது குடும்பத்தார் ஆகியோர் கவனத்துக்குரியவர்கள். ஆக, இங்கு குறிப்பிட்ட அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றியை உளம் மகிழ்ந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் இலக்கிய உலகுக்குப் பெரும் பங்காற்றிக்கொண்டிருந்தவரும் அதே போல், தமிழ் இலக்கண உலகுக்கு எழுத்திற் பெரும் பங்காற்றத் தொடங்கியவருமான பேராசிரியர் செ. யோகராஜா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, அவர்களைக் கௌரவப்படுத்தும் நோக்கில் அவர்தம் புகைப்படத்தை முன்னட்டையில் 'இலக்கணம்' சஞ்சிகை பிரசுரித்திருக்கின்றது.

- த. யுவராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

- இலக்கணமும் பேராசிரியர் செ.யோகராஜா அவர்களும் – 3
- 'இலக்கணம்' எனும் காலாண்டிதழ் – 5
- அகிலநிலை இலக்கணமும் தோற்றுவாய் இலக்கணமும் – 7
- அறிவியல் அணுகுமுறையில் தொல்காப்பியம் – 10
- தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம் – 12
- வாழ்த்துகின்றோம் – 15
- தமிழ் இலக்கணச் செயலிகள் எனும் புது உலகம் – 16
- யாப்பிலக்கணம் - தொடர் 2 – 18
- தொல்காப்பியத்தில் பெயரிடல் சிந்தனை – 22
- ஆகுபெயர் – 24
- மரப்பெயர்ப் புணர்ச்சிக் கோட்பாடுகள் – 26
- தொல்தமிழ் கூறும் மொழியிலக்கணமும் உயிரிலக்கணமும் – 29
- க.பொ.த (உயர்தரம்) - தமிழ் – 31
- க.பொ.த (சாதாரண தரம்) - தமிழ்மொழியும் இலக்கியமும் – 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணமும் பேராசிரியர் செ.யோகராஜா அவர்களும்

த. யுவராஜன்
(D. Juwarajan)
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்),
மட்டக்களப்பு, இலங்கை.

அமரர் பேராசிரியர் செ.யோகராஜா அவர்கள் (17.12.1949 - 07.12.2023) நவீன இலக்கியம், நாட்டார் இலக்கியம், திறனாய்வு முதலிய விடயங்களில் பல கட்டுரைகளை, சில நூல்களை எழுதிய அளவுக்கு இலக்கணக் கட்டுரைகளையோ இலக்கண நூல்களையோ எழுதவில்லை. "விரல்விட்டு எண்ணக்கூடியளவுக்குக்கூட இலக்கணக் கட்டுரைகளை எழுதவில்லையே என்ற கவலை தனக்குள் இருக்கின்றது என்றும் தான் எழுதிய கட்டுரைகளுள் ஒன்றுதான் ஞாபகத்தில் இருக்கின்றது" என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களைத் தொடர்புபடுத்தி, தான் எழுதிய இலக்கணக் கட்டுரையொன்றை 'இலக்கணம்' சஞ்சிகையில் தொடர்புபடுத்தி எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை தொடர்பாகக் கேட்ட போது இப்போதுதான் அது ஞாபகத்துக்கு வந்ததாகத் தெரிவித்தார்.

இலக்கணத்தைப் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்பித்த அந்த அனுபவங்களினூடாகக் கிடைத்தவற்றை - இலக்கணப் போக்குகளை - புதிய இலக்கணத் தேவைகளை எழுத்தில் கொண்டு வராமைக்குக் காரணம், அதற்கான சந்தர்ப்பம், களம் என்பன கிடைக்காமையே என்று தெரிவித்த அவர், இப்போது (2023) மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'இலக்கணம்' என்னும் பெயரிலான சஞ்சிகை சந்தர்ப்பத்தையும் களத்தையும் தந்துகொண்டிருப்பதால் தன்னால் இலக்கணக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதித் தர முடியும் என்ற விடயத்தை மகிழ்ச்சியுடன் வெளிப் படுத்தும் போது அவரது ஆதங்கம் தெளிவாகவே தெரிந்தது. இலக்கிய விடயங்களை முன்னெடுக்க முகிழ்த்த 'மறுமலர்ச்சி' எனும் சஞ்சிகை இலக்கண விடயங்களையும் அப்போதே பிரசுரித் திருந்தமையைச் சுட்டிக்காட்டினார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

2023இல் ஒவ்வொரு காலாண்டிலும் இலக்கணக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதியது போல் 2024இலும் 'இலக்கணம்' சஞ்சிகையில் தொடர்ந்து எழுதி, அந்த எட்டுக் கட்டுரைகளையும் ஓர் இலக்கண நூலாக வெளிக்கொணர வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தார். 2024இல் முதலாவது கட்டுரை, "தெ.பொ.மீ அவர்களால் பாராட்டப்பட்ட இலங்கைத் தமிழ்ப் பெண்மணி ஒருவர் 1940களில் இலக்கணத்துக்கு ஆற்றிய பணிபற்றியதாக இருக்கும்" என்று அவர் தெரிவித்த போது இவற்றையெல்லாம் நீங்கள் எப்படி - எங்கிருந்து தேடிக் கண்டுபிடிக்கிறீர்கள் என்று கேட்ட வேளை, "பல்கலைக்கழகத்தில் பணியாற்றுதல் என்றால் 'விரிவுரையாற்றுதல்' என்பது மட்டுமல்ல; 'ஆய்வுசெய்தல்' என்பதும் மிக முக்கியமான சமூகப்பணி என்பதைப் புரிதல் வேண்டும். இந்த இரு பணிகளையும் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது விரும்பிச்செய்த தாலும் பல்கலைக்கழகத்தில் இல்லாத போதும் தொடர்ந்து விரும்பிச்செய்வதாலும் இந்தக் கண்டுபிடிப் புக்களைச் செய்ய முடிகின்றது" என்று திமிர் இல்லாத வழமையான சிரிப்போடு சொல்லிமுடித்தார்.

பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள் தன் ஞாபகத்தின்படி ஜீவநதி சஞ்சிகையில் (ஐப்பசி 2010) வெளிவந்த கட்டுரைதான் தனது முதலாவது இலக்கணக் கட்டுரை என்கின்றார். "தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கையும் தற்கால இலக்கியக் கொள்கை அடிப்படையில் அதன் பொருத்தப்பாடும்; சில அவதானிப்புக்கள்" என்னும் தலைப்பில் அமைந்ததே அக்கட்டுரையாகும். இது தொல்காப்பியப் பொருளதி காரத்தை அடிப்படையாகக் கொண்டது. அதனால் இலக்கியத்தைத் தவிர்க்க முடியாமற் போய்விட்டது. இரண்டாவது கட்டுரை, பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடன் தொடர்புபட்ட கட்டுரையாக இருக்கலாம்.

மேற்குறித்த ஒழுங்கின் பிரகாரம் பார்த்தால் 'இலக்கணம்' காலாண்டுச் சஞ்சிகையில் அவர் எழுதிய இலக்கணக் கட்டுரைகளுக்கு 3ஆவது, 4ஆவது, 5ஆவது, 6ஆவது என்று தொடரிலக்கம் இட்டுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலக்கணம்' சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரைகளின் தலைப்புக்கள் வருமாறு:

1. "அறியப்பட வேண்டிய இலக்கண நூல்; தமிழ் இலக்கணத் தெளிவு" (2023 தை - பங்குனி).
2. "தமிழ்மொழியில் பயன்பாட்டு இலக்கணம்பற்றிச் சிந்தித்த இலங்கை முன்னோடிகள்" (2023 சித்திரை - ஆனி).
3. "இலக்கண வினா விடை முன்னோடிகள்" (2023 ஆடி - புரட்டாதி).
4. "கோட்பாட்டு அடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற இலக்கணம் சார்ந்த ஆய்வுகள்" (2023 ஐப்பசி - மார்கழி).

இந்தக் கட்டுரைகள் யாவும் வெளிவருவதற்குக் களம் அமைத்துக்கொடுத்த 'இலக்கணம்' சஞ்சிகையின் வெளியீட்டு விழா சிறிய அளவில் எனது வீட்டிலேயே 22.01.2023இல் நடைபெற்றது. அந்த வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தவர், பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள். இலக்கணத்துக்கென்றொரு சஞ்சிகை, இலங்கையிலோ இந்தியாவிலோ வெளி வரவில்லை என்ற கருத்து இலக்கணத்தோடு தொடர்புடைய இலங்கை, இந்தியப் பேராசிரியர்களால் (நான் தொடர்புகொண்டவர்கள் மட்டும்) ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அந்த வகையில் பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள், இலக்கணத்துக்கான முதலாவது சஞ்சிகை வெளியீட்டில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தவர் என்ற பெருமைக்கும் உரியவராகின்றார்.

இலக்கியத்தை மட்டுமல்ல இலக்கணத்தையும் கோட்பாட்டு அடிப்படையில் பார்க்க வேண்டும் என்னும் உந்தலால், "கோட்பாட்டு அடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற இலக்கணம் சார்ந்த ஆய்வுகள்" என்னும் தலைப்பிலான கட்டுரை எழுதப்படலாயிற்று. இக்கட்டுரை, இலக்கணத்தை மார்க்சிய நோக்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி பார்த்ததையும் தமிழ்மொழி இலக்கண இயல்பு நோக்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பார்த்ததையும் மூலபாடத் திறனாய்வு நோக்கில் பண்டிதர் க. வீரகத்தி அவர்கள் பார்த்ததையும் அவயவிக் கொள்கை நோக்கில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் பார்த்ததையும் வெளிக்கொணர்வதாக உள்ளது.

இந்தக் கட்டுரையில் இடம்பெற்றவற்றுள் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களைக் கோட்பாட்டு நிலையில் பார்த்த விடயங்களை மட்டும் கவனத்திற்கொண்டு தமிழ்நாடு பாளையங்கோட்டை 'மேலும்' வெளியீட்டகமும் 'ஆழ்வார்குறிச்சி இங்கே இன்று' என்ற அமைப்பும் இணைந்து, ஒவ்வொரு புதன் கிழமையும் நடத்துகின்ற காணொளிக் கருத்தரங்கிலே (06.12.2023இல்) இந்தக் கோட்பாட்டு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதற்குக் காரணமாக இருந்தது, பேராசிரியர் செ. யோகராஜா அவர்களின் இக்கட்டுரை. இவ்விடயத்தை முன்னெடுத்தவர், பேராசிரியர் 'மேலும்' சிவசு அவர்கள். இதனூடாக வெகுவிரைவாகவே தமிழ்நாட்டுப் பேராசிரியர்கள் சிலரால் இலக்கணத்தில் அடையாளங் காணப்பட்ட ஆளுமையாகப் பேராசிரியர் செ. யோகராஜா திகழ்கின்றார். அடுத்த புதன் கிழமை (13.12.2023) பேராசிரியர் செ. யோகராஜா அவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

22.01.2023இல் நடைபெற்ற முதலாவது 'இலக்கணம்' சஞ்சிகை வெளியீட்டின் போது பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த வேளை

ஏனைய துறைகளைப் போல இலக்கணத் துறையிலும் பெருமைக்குரியவராகத் திகழ்கின்ற பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள் 07.12.2023இல் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்த போது மனம் பாரமாகவே இருந்தது - இருக்கின்றது - இருக்கும். இவர் 07.12.2023இல் மரணமடைந்துவிட்டார் என்று பதிவுசெய்வதைவிட, "பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள் வாசிப்பதையும் சிந்திப்பதையும் எழுதுவதையும் நிரந்தரமாக நிறுத்திக்கொண்ட நாள் 07.12.2023 ஆகும்." என்று பதிவுசெய்வதே மிகப் பொருத்தமானதாக இருக்குமெனக் கருதுகின்றேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலக்கணம்' எனும் காலாண்டிதழ்

முதுநிலைப் பேராசிரியர் சு.இராசாராம்
(Senior Professor S. Rajaram)
முன்னாள் தலைவர், இந்திய மொழிகள் பள்ளி,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு, இந்தியா.

இலக்கிய இதழ்கள் போல இலக்கணத்திற்கும் தனி இதழ் தேவை என்னும் எண்ணமே உருவாகாத தமிழறிஞரிடையே 'இலக்கணம்', காலாண்டுச் சஞ்சிகையாக வரவுவைத்துள்ளது. கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இலங்கை, மட்டக்களப்பிலிருந்து இவ்விதழ் வெளிவருகிறது. தமிழ் இலக்கியத் திறனாய்வுக்கு இலங்கைத் தமிழறிஞர்களின் பங்களவுக்குச் சற்றும் குறையாமல் இலக்கணத் திறனாய்வுக்கும் இலங்கைத் தமிழறிஞர்களின் பங்கு பெரிது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, க. வீரகத்தி, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், ஆ. சதாசிவம், ஆ. வேலுப்பிள்ளை, எம். ஏ. நுஃமான் போன்றோர் தமிழகத்திற்கு நன்கு அறிமுகமானவர்கள். இவர்களின் இலக்கிய, இலக்கணப் படைப்புகள், இலக்கணம் கற்றலில் பள்ளி மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இலக்கண ஆய்வுக்கான புத்தாக்க முயற்சியின் இன்றைய தேவை ஆகியவை 'இலக்கணம்' என்னும் இவ்விதழின் தோற்றத்திற்கான பின்புலம் எனலாம். இப்பின்புலத்தை மையமாகக் கொண்டு,

- தமிழிலக்கண வளர்ச்சியில் இலங்கைத் தமிழறிஞர்களின் பங்கு
- இலங்கையில் தமிழ் இலக்கணம் கற்றலில் பள்ளி மாண வர்களுக்கு எழும் பிரச்சினைகள்
- இலக்கணத்தைக் கற்பிக்கப் புதிய கற்பித்தல் முறைகளின் தேவை
- இலக்கண ஆய்வு மேம்பாடு

என்னும் நான்கு வலுவான நோக்கங்களை இக்காலாண்டிதழ் வகுத்துள்ளது.

இலக்கியத் திறனாய்விற்கு இலங்கையிலிருந்து வெளிச்சம் பாய்ச்சி தமிழக இலக்கிய, இலக்கண ஆய்வுப் போக்கில் மாற்றுச் சிந்தனையை வளர்த்த தமிழறிஞர்கள் முகப்புச் சித்திரங்களாக 'இலக்கணம்' இதழ்களில் பெருமைப்படுத்தப்படுகின்றனர். பொதுவான இதழ் என்றில்லாமல் குறிப்பிட்ட கற்றல், கற்பித்தல் நோக்கங்களைக் கொண்டுள்ளதால் வாசிப்பு எல்லையைத் தாண்டிய கல்வியியல் பயன்பாடு இதன் தனிச் சிறப்பு நோக்கமாகும். இலக்கண ஆய்வுபற்றிய பன்முகச் சிந்தனைகள் அடங்கிய கட்டுரைகளைக் கொண்டு வெளிவருதால் இதனைக் கொள்வோர் பலர் ஆய்வாளராக உள்ளனர். இலக்கணவியல், இலக்கண உருவாக்கம், இலக்கண மரபுகள் சார்ந்த ஆய்வுத்தளங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலைகளில் இலக்கணத்தைக் கற்கும்போது மாணவர்க்கு ஏற்படும் பிரச்சினைகளை முறையாகத் திட்டமிட்டு அவற்றைக் கற்பிக்க உதவும் உத்திகளைத் தொகுத்துப் பல்வேறு கற்பித்தல் முறைகளை உருவாக்கி ஆசிரியருக்குத் தரப்பட்டுள்ளன. "வெவ்வேறு விடயங்களை உள்ளடக்கி இலக்கணம் கற்பிப்பதற்கென நவீன முறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன" என்று இச்சஞ்சிகையில் (இலக்கணம்-2, சித்திரை - ஆனி, 2023) பேராசிரியர் சபா. ஜெயராசா கூறும் செய்தி இவ்விதழின் முதன்மை நோக்கத்தை நிறுவுமுகமாக உள்ளது.

இலக்கணம் கற்றல், கற்பித்தல் தொடர்பான பல கட்டுரைகளுடன் இலக்கண ஆய்வு தொடர்பான கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகளுள் பல இலக்கண அமைப்புக்கூறுகள் சார்ந்த பிரச்சினைகளைப் பேசுகின்றன. சில கட்டுரைகள் ஆழமான இலக்கணவியல் கோட்பாடு சார்ந்தவை. 'இரட்டையர்' என்னும் புனைபெயரில் தமிழாசிரியர் சரவணமுத்து, பண்டிதர் அ. பஞ்சாட்சரசர்மா ஆகியோர் "இலக்கண மாறுபாடு" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையை மையமாகக் கொண்டு 'தமிழ்மொழியில் பயன்பாட்டு இலக்கணம்பற்றிச் சிந்தித்த இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடிகள்' (இலக்கணம்-2, சித்திரை- ஆனி, 2023) என்னும் பேராசிரியர் செ. யோகராஜாவின் கட்டுரை குறிப்பிடத்தக்கது.

இலக்கணத்தை ஒரு மொழியைப் பேசுவோனின் உளச்சார்பின்றியோ சமூகச்சார்பின்றியோ விவரிக்க முடியாது. இலக்கணம் உட்கொண்டிருக்கும் இப்பன்முகத் தன்மை புறநிலையில் மொழியின் உள்ளமைப்புகளை முறையாக அடையாளம் காண ஓர் இலக்கண நூலாசிரியனுக்கு உதவுகிறது. எனவே மரபிலக்கண அறிவை 'நூல்' என்னும் கட்டமைப்பிலிருந்து புறத்தே கொண்டுவந்து பிற துறையறிவுசார் புலங்களோடு பரிமாறிக்கொள்ளுதல் இன்றியமையாதது. இப்பரிமாற்றம் இலக்கணத்தின் உன்னதத்தைப் புரிந்துகொள்ள உதவுவதுடன் இலக்கணப் படிப்பை இலக்கணவியல் என்னும் துறைப்படிப்பாக முழுத் தகுதிப்படுத்த உதவும்.

இலக்கண ஆய்வைப் பொறுத்தவரையில் இன்னும் நெடுந்தூரம் நாம் பயணிக்க வேண்டியுள்ளது. இலக்கணத்தின் நவீன முகங்களைக் காணும் குறிக் கோளோடு இப்பயணம் அமைய வேண்டும். இன்று ஒவ்வொரு சமூக விஞ்ஞானத் துறையும் இம்முகங்களைக் காணும் உத்வேகத்துடன் உள்ளிருந்தே புதிய துறைகளை உருவாக்கி வருகின்றன. கல்விமொழியியல், சமூக மொழியியல், உளமொழியியல், மானுடமொழியியல் போன்ற பல துறைகள் மொழியியல் துறையிலிருந்து முளைத்தவைதாம். மொழியமைப்பைப்பற்றிப் பேசும் இலக்கணத்திற்கும் இவ்வுற்பத்தித் திறன் உண்டு. இலக்கணம்பற்றிய சிந்தனைகளை ஒருங்கிணைத்து 'இலக்கணவியல்' என்னும் ஒரு தனித் துறைப்படிப்பிற்கான தளமாக, மொழியியல் துறையைப்போலக் கட்டமைப் போமேயானால் இப்பன்முகத்துறை வளர்ச்சி, இலக்கண வியலிலும் சாத்தியமே. இலக்கணவியலுக்கும் மொழி யியலுக்கும் மொழியின் இலக்கண அமைப்புகளே அடிப்படை ஆய்வுப்பொருள். எல்லா வகையிலும் மொழியியல், இலக்கணவியல் துறை வளர்ச்சிக்கான உருமாதிரியாக அமையலாம். இதன்மூலம் புதிய அணுகுமுறைகளும் பகுப்பாய்வு முறையியலும் இலக்கண ஆய்வில் மேம்படும். இலக்கணம்பற்றிய இப்புத்தாக்கச் சிந்தனைகள் அடங்கிய ஆய்வுகளுக்கு முன்னுரிமை தந்து 'இலக்கணம்' இன்னும் பெருமை சேர்க்கலாம்.

'இலக்கணம்' என்னும் இக்காலாண்டிதழ் இலக்கணத்தைப்பற்றிய முழுமையான அறிவைப் பெறும் வாய்ப்பைத் தந்துள்ளது. இவ்வாய்ப்பை இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியரும் இலக்கண ஆய்வில் ஆர்வம் உடையோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே இவ்விதழாசிரியரின் எதிர்பார்ப்பாகும். இதழாசிரியர் த. யுவராஜன் அவர்களுக்கு நம் வாழ்த்து உரியது. ■

'இலக்கணம்' சஞ்சிகையின்

சந்தா விபரம்

- இது, இந்த 'இலக்கணம்' சஞ்சிகைக்கானது.
- இது 2024க்குரியது.
- இது ஒரு வருடத்துக்கான சந்தா.
- 04 x 300.00 = **1200.00** (இலங்கை ரூபாய்)
- 04 x 150.00 = **600.00** (இந்திய ரூபாய்)
- தபாலில் தனியாகவோ கூட்டாகவோ பெற விரும்பின் அச்செலவு தனியாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.
- இலக்கணத்தில் அக்கறைகொண்ட மற்றைய வெளிநாட்டவரும் 'இலக்கணம்' சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தொடர்புகொள்க.
- தொடர்பு : **+94 714496681**
  djuwan58@gmail.com









■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலநிலை இலக்கணமும் தோற்றுவாய் இலக்கணமும்

பேராசிரியர் சபா. ஜெயராசா Ph.D, D.Lit.
(Professor Saba. Jeyarasa)
முன்னாள் தலைவர், கல்வித்துறை,
முன்னாள் தலைவர், இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

நடத்தையியல் (BEHAVIOURISM) என்பது, அறிவியல் வரையறைக்குள் உளவியலைக் கொண்டுவந்த செயற்பாட்டை மேற்கொண்டது. நடத்தைவாதிகள் அறிவியல் சார்ந்த பரிசோதனை வாயிலாகக் 'கற்றல்' என்ற செயற்பாட்டை விளக்கினர்.

பேராசிரியர் ஸ்கின்னர், நடத்தை உளவியலை உச்சநிலைக்கு வளர்த்துச்சென்றார். மொழி கற்றலை உள்ளடக்கிய, 'மனிதரின் செயற்பாடுகள் அனைத்தும்' தூண்டி, துலங்கல், மீளவலியுறுத்தல் ஆகியவற்றின் இணைப்பால் வளர்த்துச் செல்லப்பட முடியும் என்பதைப் பரிசோதனைகள் வாயிலாக நிறுவினார். அதனைக் கோட்பாட்டு வடிவுக்குக் கொண்டுவந்து, "விளைவை உருவாக்கும் நிபந்தனைப்பாடு" (OPERENT CONDITIONING) என்ற கருத்துவடிவத்தை முன்வைத்தார்.

தூண்டி, துலங்கல், வெகுமதி தருதல் அல்லது மீள வலியுறுத்தல் வாயிலாக மொழியைத் திரட்டிக்கொள்ளல் என்ற கருத்துவடிவத்தை அடியோடு நிராகரித்தவர், நோம் சோம்ஸ்கி.

"தூண்டியின் வறுமை" என்பதை சோம்ஸ்கி வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். மனிதரின் உயிரியல் காரணிகளைக் கருத்திற்கொள்ளாது வெறும் பொறிமுறைச் செயற்பாட்டால் மொழியைத் திரட்டிக்கொள்ளலாம் என்ற கருத்து முற்றிலும் தவறானது என சோம்ஸ்கி விளக்கினார்.

உயிரினங்களின் வளர்ச்சியோடும் மலர்ச்சியோடும் கூர்ப்போடும் மனித மூளை, உருவாக்கம் பெற்றுள்ளது. அந்த அடிப்படையில் மொழியைத் திரட்டிக் கொள்ளலையும் கற்றலையும் சோம்ஸ்கி விபரித்தார்.

அதன் தொடர்ச்சியாக அகிலநிலை இலக்கணம் (UNIVERSAL GRAMMAR), தோற்றுவாய் இலக்கணம் (GENERATIVE GRAMMAR) முதலான கருத்துவடிவங்களைச் சோம்ஸ்கி முன்வைத்தார்.

அறிகை விஞ்ஞானத்தில் சோம்ஸ்கி பெரும் புரட்சியைத் தூண்டியவர். உயிர்சார்ந்த மொழியியல் நோக்கை உறுதிப்படுத்தியவர். மேலும் மொழியின் கட்டுமானம் உயிரியல் தொடர்ச்சி வழியாக மனித மூளையிலும் இடம்பெற்றுள்ளது என விளக்கினார்.

"மனிதரின் பண்பாட்டுக் கோலங்கள் வேறுபட்டவையாக இருக்கலாம்; வேறுவேறுபட்ட மொழிகளைப் பேசலாம்; ஆனால் மனித மூளையின் மொழிக் கட்டுமானம் அனைத்து மனித குலத்துக்கும் ஒன்றாகவே உள்ளது. அதாவது அனைத்து மனிதரதும் மூளையானது மொழி தொடர்பான ஒரே இயல்பைக் கொண்டுள்ளது." என விபரித்தார்.

'மொழியைத் திரட்டிக்கொள்ளல்' என்பது மொழியின் அடிப்படையான கட்டமைப்பைப் புரிந்து கொள்ளலாகும். மொழியைப் பிரதிநிதித்துவம் செய்தல், தொடர்பாடலுக்குரிய சொற்களைத் தெரிந்தெடுத்துப் பயன்படுத்துதல், வசனங்களை உருவாக்குதல் முதலியனவும் மொழித்திரட்டலுடன் இணைந்தவை.

அந்த ஆற்றலானது, மனித உயிரியல் வளர்ச்சியோடு கிடைக்கப் பெற்ற பேறாகும். அதனை அடிப்படையாகக் கொண்டே, "அகிலநிலை இலக்கணம்" அல்லது "உலகளாவி நிற்கும் இலக்கணம்" என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

உலகில் உள்ள எல்லா மொழிகளிடத்தும் பொதுவான அடிப்படைப் பண்புகள் உள்ளன.

ஜோசப் கிறீன் பேர்க் என்ற ஆய்வாளர், முப்பது மொழிகளைப் படித்தார். அம்மொழிகள் அனைத்திலும் நாற்பத்தைந்து அடிப்படையான பொதுப் பண்புகள் அல்லது அகிலப் பண்புகள் இருத்தலைக் குறித்துரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்ஸ்கியின் 'அகிலநிலை இலக்கணம்' மொழி பற்றிய காட்சியை விரிவுபடுத்தியுள்ளது. மனித மூளை மேற் கொள்ளும் மொழித்திரட்டற் செயற்பாடு, எல்லா மனிதருக்கும் பொதுவான உயிரியல் அடிப்படையைக் கொண்டது என்ற அறிகைக்காட்சி அவரால் முன்வைக்கப் பட்டுள்ளது.

மொழியைத் திரட்டிக்கொள்ளும் செயற்பாட்டை உளவியலாளர் பியாசே, "அறிகைத் திரள்கை" (SCHEMA) என்பதுடன் தொடர்புபடுத்தி விளக்கினார். அதுவும் மூளையின் தொழிற்பாட்டையும் சமூக இடைவினை களையும் அடிப்படையாகக் கொண்ட கருத்துவடிவமாகும். பியாசேயும் சோம்ஸ்கியைப் போல் மொழியைத் திரட்டிக் கொள்ளல், இலக்கண விதிகளை அறிந்துகொள்ளல் ஆகிய வற்றில் மூளையின் இயல்பை வெளிப்படுத்தினார். அதே வேளை சோம்ஸ்கியிலிருந்து வேறுபட்டு, மனிதரின் வயது வளர்ச்சிக்கேற்ப கற்றலின் செயற்பாட்டு வளர்ச்சிப்படிநிலை களையும் பியாசே விளக்கினார். அதாவது, மொழி விருத்தியில் வயதுநிலைப்பட்ட மாற்றங்களைத் தொடர்பு படுத்திக்காட்டினார்.

மொழியைத் திரட்டிக்கொள்வதில் பண்பாட்டு வரலாற்றுக் கோட்பாட்டை முன்வைத்த மார்க்சிய உளவியலாளர் வைக்கோட்சி தந்த கருத்து, தனித்துவ மானது. அவரும் சோம்ஸ்கியிலிருந்து வேறுபடுகின்றார். சமூக பண்பாட்டுச் சூழலால் மனித மனம் உருவாக்கப்படு கிறதென்றும் மொழித்திரட்டலில் சமூக பண்பாட்டு நிலைவரமும் இடைவினைகளும் பங்கேற்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

மொழியும் இலக்கணமும் கற்றுக்கொள்வதில் அண்மை விருத்தி வலயத்தின் (ZONE OF PROXIMAL DEVELOPMENT) முக்கியத்துவத்தை வைக்கோட்சி முன்வைத்தார். அறிகை உளவியலிலும் சமூக உள வியலிலும் இது ஒரு முக்கியமான கருத்துவடிவமாகக் கொள்ளப்படுகின்றது. சுயமாக ஒருவர் அறிவைத் திரட்டிக் கொள்ளும் வலயத்துக்கும் எவ்வாறு முயன்றாலும் கற்றுக்கொள்ளப்பட முடியாத வெளிவலயத்துக்கும் இடைநடுவில் உள்ளதே அண்மை விருத்தி வலயம் ஆகும். ஆற்றலுள்ளோரின் துணையால் அறிவை ஈட்டிக்கொள்ளும் வலயமாக அது அமைகின்றது.

இவ்வாறான கருத்தாடல்கள் மத்தியில் சோம்ஸ்கியின் கருத்துக்கள் தனித்துவமாயும் வேறுபாடு கொண்டவையாயும் அமைகின்றன. அவர் உருவாக்கிய மிக முக்கியமான இன்னொரு கருத்துவடிவமான "தோற்றுவாய் இலக்கணம்" அல்லது "பிறப்பெழுகை இலக்கணம்" அமைகிறது. அவரின் மிகப் பெரிய பங்களிப்பாக அது அடையாளப்படுத்தப்படுகிறது.

இலக்கணம் என்பது பல்வேறு விதிகளின் தொகுப்பாக அமைகின்றது. சொற்களைப் பயன்படுத்தி, இலக்கண விதிகளுக்கு உட்பட்டதாக எண்ணிறைந்த வசனங்களை உருவாக்கும் ஆற்றல் மொழிகளிடத்தே உண்டு. ஒருவர் தனது தேவைக்கு ஏற்றவாறு இலக்கண அமைதி கொண்ட எத்தனை வசனங்களையும் உருவாக்க முடியும். அதேவேளை இலக்கண விதிகளை மீறிய வசனங்களையும் உருவாக்க முடியும்.

இலக்கணம் என்பது திட்டவட்டமான விதிகளை உள்ளடக்கிய வரையறைகளைக் கொண்டது. அவ்வாறான வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உள்ளே நின்று எல்லையற்ற வசனங்களை உருவாக்க முடியும். அதாவது இலக்கணம் வரையறுக்கப்பட்ட எல்லையைக் கொண்டது. ஆனால் வசனங்களோ எல்லை கடந்த நிலையில் தோற்றுவிக்கப்படக்கூடியவை. அதனை விளக்குவதே தோற்றுவாய் இலக்கணம் ஆகும்.

புதிய கருத்துவடிவங்களை அல்லது அறிவளவை வடிவங்களைத் (LOGICAL FORMS) தோற்றுவிக்கும் திறனை மனித மூளை கொண்டுள்ளது. உள்ளார்ந்த மொழியாற்றல் ஒவ்வொருவரதும் மூளையிலும் உட்பொதிந்துள்ளது. தோற்றுவிக்கப்பட்ட வசனம் இலக்கண வழு அற்றதா என்ற தீர்மானத்தை மேற்கொள்ளும் திறனையும் தோற்றுவாய் இலக்கணம் வெளிப்படுத்தும்.

கணிதவியலில் அமைந்துள்ள தோற்றுவாய்க் கருத்தை, சோம்ஸ்கி மொழியியலுக்குப் பயன்படுத்தி, புதிய புலக்காட்சியையும் மாற்றுச் சிந்தனையையும் உருவாக்கினார்.

தோற்றுவாய் இலக்கணம் என்பது அனைத்து மொழிகளிடத்தும் காணப்படும் பொதுவான ஒரு பண்பு. தனித்து ஒரு மொழிக்கு மட்டும் உரியதன்று. அது வெளிப்படையான தன்மையைக் கொண்டது. ஒவ்வொரு மொழியிலும் வசனங்கள் உருவாக்கப்படும் பொழுது வசனக் கட்டுமானம்பற்றிய தெளிவற்ற நிலையை இல்லாமற்செய்து விடுகிறது. அதாவது, வசனக் கட்டுமானம் இலக்கண நிலையில் பொருத்தப்பாடு கொண்டுள்ளதா என்ற தெளிவைக் கொடுக்கின்றது.

சோம்ஸ்கி அவர்கள் உருவாக்கிய "தோற்றுவாய் இலக்கணம்" என்ற கருத்துவடிவம் செவ்வியல் இசையிலும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. பிறியன் ஈனோ என்ற இசைமேதை அதனை விளக்கிக் கூறியுள்ளார். இசையில் தொடர்மாற்றங்களும் வேறுபட்ட வடிவங்களும் தோற்றுவாய் இலக்கணத்தை அடியொற்றி மேலெழச்செய்கின்றன. "முடிவற்ற மாறியாக வளரும் இந்த இசை, முடிவற்ற மகிழ்நிலை ஈடுபாட்டையும் தரும்" என்று மேலும் விளக்கினார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் தம்மிடமுள்ள அறிதிரளைப் பயன்படுத்தி, புதிய புதிய முகிழாக்கங்களை (IDEAS) அல்லது பொருத்தமான எண்ண வடிவங்களைத் தொடர்ந்து உருவாக்கிக்கொள்ளல் தோற்றுவாய்க் கற்றல் எனப்படுகிறது. இந்தத் "தோற்றுவாய்க் கற்றல்" என்பது கற்றல் கற்பித்தலிலும் நிகழ்த்தப்படுகிறது.

தோற்றுவாய்க் கற்றலை மேலெழச்செய்வதற்குக் குறித்த பாடத்தோடு தொடர்புடைய ஒளிக்காட்சிகள், ஒலிப் பதிவுகள், வினாக்கள், புதிர்கள் முதலியவை பயன்படுத்தப் படுகின்றன. அதனால் ஆழ்கற்றல் முன்னெடுக்கப்படுகிறது.

கற்றல் என்பது அறிபொருளை உள்வாங்கு வதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. அறிவின் தொடர்ச்சியைப் பலநிலைகளிலே நீட்சியடையச் செய்யும் திறனையும் உள்ளடக்கியது. மேலும் அண்மைக் காலத்துக் கற்பித்தல் முறையில், 'தோற்றுவாய் செயற்கை நுண்மதியும்' எடுத்தாளப்படுகின்றது.

அறிகை உளவியல், மனம்பற்றிய மெய்யியல், மொழியியல், மொழி இலக்கணம் முதலிய ஆய்வுத் துறைகளின் வளர்ச்சிக்கு சோம்ஸ்கி முன்வைத்த "அகிலநிலை இலக்கணம்", "தோற்றுவாய் இலக்கணம்" ஆகிய கருத்துவடிவங்கள் உயிர்ப்போட்டமான பங்களிப்பைச் செய்துள்ளன.

அந்தக் கருத்துவடிவங்களை அடியொற்றி, மேலும் வளர்ச்சிநிலை ஆய்வுகளை அவர் மேற்கொண்டார். மொழி இயல்பினதும் பயன்பாட்டினதும் சாராம்சத்தை விளக்கும், "சிற்றடங்கல் வரைபு" (MINIMALIST PROGRAM) என்பதை முன்வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

> *"மனித இலக்கணம் எந்த வேடம் தரித்து வளர்ந்திருந்தாலும் எல்லாக் காலத்திலும் மரபிலக்கணத்தின் கைப்பிடித்தே நடைபழகி யிருக்க வேண்டும். இலக்கணத்தை மனித மனத்தின் புனையுருவாக நாம் கருதுகிறோம். இவ்வாறு கருதும்வரை இலக்கண வளர்ச்சி மனிதன் தோன்றிய காலந்தொட்டு வளர்ந்து வருகின்ற ஒரு தொடர்பமே. இப்புனையுருதான் ஒரு குறிப்பிட்ட மொழியின் இலக்கணத்தை இனங்காண அவனுக்கு உதவுகிறது. சோம்ஸ்கி, மனித மனத்தின் இவ் உள்ளார்ந்த புனையுருவை மொழி அறிதிறன் என்று குறிப்பிடுகிறார்."*
>
> *- சு. இராசாராம், நோம் சோம்ஸ்கி (2022)*

நூல் வரவு



நூல்: தமிழ் இலக்கணப் புறனடைகள்

ஆசிரியர்: முனைவர் ஞா. குருசாமி

வெளியீடு: பரிசல் புத்தக நிலையம், சென்னை 600086.

விலை: **290.00** (இந்திய விலை)

இலக்கண நூல்களிலே காணப்படுகின்ற புறனடைச் சூத்திரங்கள் கூறுகின்ற விடயங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி அச்சூத் திரங்களின் முக்கியத்துவம் தொடர்பாக ஆராய்வதாக இந்நூல் அமைந்துள்ளதாக ஆசிரியராற் குறிப்பிடப்படுகின்றது.

இலக்கண உலகில் இது வித்தியாசமானதாக அமைந்துள்ளது; தேவையாயுமுள்ளது.

(இந்த நூலாசிரியரின் கட்டுரையொன்று இந்த இதழில் இடம்பெற்றுள்ளது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் அணுகுமுறையில் தொல்காப்பியம்

முனைவர் செல்வஜோதி இராமலிங்கம்
(Dr. Selvajothy Ramalingam)
பேராசிரியர்,
மொழிகளும் மொழியியலும் மற்றும்
மலேசிய மொழிகளும் பிரயோக மொழியியலும் பீடம்,
மலேசியப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா.

தமிழ்மொழியின் சிறப்பு அதன் தொன்மையிலா தொடர்ச்சியிலா என்ற கேள்விக்குப் பதில் அதன் தொன்மையும் தொடர்ச்சியுமேயாகும். தொன்மை இல்லாமல் தமிழ்மொழியின் தொடர்ச்சி இன்று இல்லை. தமிழ்மொழியின் இன்றைய வளர்ச்சி என்பது நீண்ட நெடிய மரபமைவு கொண்டது. இன்றைய நிலையில் தமிழ்மொழி சார்ந்த ஆய்வுகள் பலநிலைகளில் பல ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில், தொல்காப்பியம் சார்ந்த ஆய்வுகளை ஆய்வாளர்கள் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து வருவதையும் நாம் நன்கறிவோம். குறிப்பாக, கற்றல் கற்பித்தலுக்குத் தொல்காப்பியம் எவ்வாறு துணைபுரிகிறது என்பதைப் பற்றிய ஆய்வுகளும் மொழியியல் நோக்கிலான பல்வகை ஆய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருக்கும் அறிவியல் அணுகுமுறைகளை ஆராய விழையும் முயற்சிகள் சற்றுக் குறைவாகவே அமைந்துள்ளது. ஆக, இந்த ஆய்வானது தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஆய்வு அணுகுமுறைக் கூறுகளைக் கண்டறிவதும் அவற்றை விளக்குவதுமாகும்.

அறிவியல் அணுகுமுறை என்பது ஓர் ஆய்வுக்கான தரவுகளை முறையான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி தரவுகளைத் திரட்டி, சரியான முறையில் பகுப்பாய்வு செய்வதாகும். இவ்வாறு செய்வதன் மூலம் ஆய்வின் முடிவுகள் நம்பகத்தன்மையும் (reliability) ஏற்புடைமை (validity) கொண்டிருப்பதை உறுதிப்படுத்தலாம். மொழி சார்ந்த ஆய்வுகளில் அவை பேச்சு மொழியாகவோ எழுத்து மொழியாகவோ இருக்கலாம். அல்லது அவ்வாறான ஆய்வுகள் சில நம்பிக்கைகள், மரபு, பண்பாடு சார்ந்தவையாகவும் இருக்கலாம். இவ்வாறான தரவுகள், தொல்காப்பியத்தில் எப்படி வெளிக்கொணரப் பட்டுள்ளது? எந்தச் சூழலில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது? போன்ற அனைத்தும் அறிவியல் ஆய்வுப் பின்புலத்தைக் கொண்டு பார்க்கப்படுவதுதான் அறிவியல் அணுகுமுறை ஆகும். தொல்காப்பியத்தின் கட்டமைப்பு மூன்று இயல்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகும். இவ்வியல்களில் காணப்படும் அமைப்புகள் எவ்வாறு அறிவியல் அணுகுமுறையோடு தொடர்புபடுத்த முடியும் என்பதைத் தொடர்ந்து காணலாம்.

தொல்காப்பியத்தில் ஆய்வு அணுகுமுறைகள் சார்ந்த முக்கியமான மூன்று கூறுகளைக் காண முடிகிறது. அவையாவன, ஆய்வுக் கூறுகள் (research elements), மொழியியல் கூறுகள் (linguistics elements), பண்பாட்டுக் கூறுகள் (cultural elements) ஆகும். இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது தொல்காப்பியத்தின் கட்டமைப்பு இன்றைய நடைமுறையில் ஆய்வில் பயன்படுத்தப்படும் அனைத்து நெறிமுறைகளையும் வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளதை அறிய விழைகிறது.

ஆய்வு அணுகுமுறை என்பது சில முக்கியமான கூறுகளைக் கொண்டுள்ள துறையாகும். அவை, ஆய்வு வடிவம் (research design), ஆய்வுச் சிக்கல் (problem statement), ஆய்வு நோக்கம் (research objective), ஆய்வு அணுகுமுறை (research methodology), ஆய்வுக் கருவி (research instrument), கோட்பாடு (theory), குவியம் (scope), எல்லைக் குறியீடு (delimitation) போன்றவை ஆகும். இந்தக் கூறுகள் அனைத்தும் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதா இல்லையா என்பதே இந்த ஆய்வின் முடிவாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு அணுகுமுறையில் முதல் கூறானது ஆய்வு வடிவம். தொல்காப்பியம் பண்புசார் (qualitative) ஆய்வு அணுகுமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. காரணம் இதற்கான தரவுகள் பேச்சு மொழி, எழுத்து மொழி போன்றவற்றை மூலமாகக் கொண்டு உற்று நோக்கலை ஆய்வுக் கருவியாகக் கொண்டு திரட்டப்பட்டிருப்பதுபோல் அமைந்திருப்பதால் இதைப் பண்புசார் ஆய்வாக வகைப் படுத்தலாம். அடுத்து, ஆய்வுச் சிக்கல். மொழிச் சிதைவையும் பிறமொழித் தாக்கத்தையும் மொழியைத் தரப்படுத்தாத நிலையையும் ஆய்வுச் சிக்கலாகக் கொண்டு, அதைத் தரப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தொல்காப்பியம் இயற்றப்பட்டிருக்கிறது. அடுத்ததாக ஆய்வு நோக்கம். தொல்காப்பியத்தில் ஆய்வு நோக்கமாக, மூன்று இயல்களிலும் அடங்கியுள்ள அனைத்து நூற்பாக்களையும் எடுத்துக்கொள்ளலாம். காட்டாக, பிறப்பியல், ஒலியியல், உருபனியல், சொல்லியல் ஆகியவையும் பொருளதி காரத்தில் யாப்பிலக்கணம், அகத்திணை, புறத்திணை போன்ற பகுதிகளையும் காணலாம். தொல்காப்பியர் ஒவ்வொரு நூற்பாவையும் திட்டமிட்டு வடிவமைத்திருக்கிறார். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நோக்கமாகப் பார்க்க முடிகிறது. ஆய்வில் நோக்கத்தை அமைக்குமுன் சில சொல்லா டல்களைப் பயன்படுத்துவர். அவை: அடையாளம் காணுதல், பகுப்பாய்வு செய்தல், ஒப்பிடுதல், வகைப்படுத்துதல், விளக்குதல், விவரித்தல் போன்றவை ஆகும். ஒவ்வொரு இயலையும் மேற்கூறிய பொருத்தமான சில சொல்லாடல்கள் கொண்டு நோக்கினால் அதற் கேற்றவாறு அந்த இயல் அமைந்திருக்கும். எடுத்துக்காட்டு: அகத்திணைக் கோட்பாட்டை விவரித்தல் அல்லது அகத்திணை உட்கூறுகளை வகைப்படுத்துதல், அகத்திணையைப் பகுப்பாய்வு செய்தல் போன்றவை யாகும்.

அடுத்ததாக ஆய்வு அணுகுமுறை. ஆய்வு அணுகுமுறையில் தரவு மூலம் அடிப்படைத் தேவையாகத் திகழ்கிறது. அதாவது தொல்காப்பியத்தில் எது தரவு மூலமாக அமைந்துள்ளது? தொல்காப்பியர் எழுத்து மொழிக்கே விதிகளைக் கூறியுள்ளார், பேச்சு மொழிக்கு அல்ல. தொல்காப்பியத்தில் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய சொற்களையும் தொல்காப்பியர் படித்து, கேட்ட எல்லா மொழி வகைகளையும் தரவுகளாகப் பயன்படுத்தி, அத்தரவுகளை வகைப்படுத்தி தொல் காப்பியம் எனும் நூலை எழுதியுள்ளார். ஆகையால் தொல்காப்பியர் தரவுகளைத் திரட்டப் பயன்படுத்திய மூலம் பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் ஆகும். பேச்சுத் தமிழைத் தரவாகப் பயன்படுத்தினாலும் பேச்சுத் தமிழுக்கான விதியைத் தொல்காப்பியர் கூற வரவில்லை. அவர் மொழித் தரவகத்தை (corpus) மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மொழிக்கு விதி எழுதுகிறார், தொடர்ந்து மொழியைத் தரப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கிறார். ஆக, தொல்காப்பியர் இவ்வாய்வுக்கான தரவுகளைப் பெறுவதற்கு உற்றுநோக்கல் ஆய்வுக் கருவியைப் பயன்படுத்தி யிருக்கலாம் என்பது இதன்வழி அறிய விழைகிறது.

இவற்றைத் தவிர்த்து, தொல்காப்பியர் தொல்காப்பியம் எழுதும் சூழல் விளைந்த போது குறிப்பிட்ட வரையறையை வரையறுத்துள்ளார். அவற்றில் சில: தொல்காப்பியம் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டுமே தவிர இரண்டாம் மொழியைப் பேசுபவர்களுக்கு அல்ல. இவ்வாறான வரையறைகள் ஆய்வு மேற்கொள்வதற்கு முக்கியமான ஒன்றாகும். இந்த வரையறை இருந்தாலேதான் ஆய்வு ஒரே நேர்கோட்டில் செல்லும். ஆய்வின் இலக்கும் தெளிவாகவும் ஆய்வு முடிவு விளைபயன் மிக்கதாகவும் அமையும். தொல்காப்பியர் தொல்காப்பியத்தை இயற்றுவதற்குமுன், பல முந்தைய நூல்களைப் படித்துவிட்டுத் தொல்காப்பியத்தை எழுதி யிருக்கிறார். இதை, சிறப்புப் பாயிரத்தில் வழங்கப்பட்ட "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி" எனும் வரி வாயிலாகக் காணலாம். இப்படி அவர் முந்தைய கருத்துகளையும் முன்னோர்களின் கூற்றுகளையும் மேற்கோள் காட்டுகிறார். இதை நாம் மேற்கோளாகவும் எடுத்துக்கொள்ளலாம். இந்த மேற்கோள், ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஆக இதனையும் நாம் தொல்காப்பியத்தில் காணலாம்.

அடுத்ததாக ஆய்வுப் பங்கேற்பாளர்கள். தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்ட ஆய்வுப் பங்கேற்பாளர்கள்பற்றிச் சிறப்புப் பாயிரத்தில் மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார். அதாவது "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து" எனும் வரியில் நிலவியல் வரையறையை வழங்குகிறார். அதாவது வடக்குப் பகுதியில் வேங்கட மலையும் தென்பகுதியில் குமரியும் ஆய்வு எல்லைக்கு உட்பட்டதாக அமைத் துள்ளார். மேலும் பங்கேற்பாளர்கள் யார் என்று கேட்டால், தமிழ்கூறும் நல்லுலகத்தில் வாழ்பவர்கள். அதாவது தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்றே அறிந்து கொள்ளலாம். .

ஆய்வின் முடிவாக, சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் அறிவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தி தொல்காப்பியர் தொல்காப்பியத்தை உயர்நிலைச் சிந்தனையோடு பகுத்து ஆராய்ந்து, வகைப்படுத்தி யுள்ளார். அறிவியல் அணுகுமுறையில் உள்ள கூறுகள் யாவற்றையும் தொல்காப்பியத்தில் பொருத்திப்பார்க்க முடிகிறது. இந்த அனைத்துக் கூறுகளையும் ஒருங் கிணைத்துப் பார்க்கும் பொழுது தொல்காப்பியம் என்பது ஓர் அறிவியல் அணுகுமுறை நூலாகக் கருதப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம்

கலாநிதி த. மேகராசா
(Dr. T. Megarajah)
விரிவுரையாளர், தமிழ் கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

'காவ்ய' என்ற வடமொழிச் சொல் தமிழில் காப்பியம் என்றும் காவியம் என்றும் வழங்கி வருகின்றது. காப்பியம் என்பது ஆங்கிலத்தில் EPIC என்று சொல்லப் படுவதற்கு நிகரானதாகும். இது மகாகாவ்யம், இதிகாசம் என்ற பெயர்களால் வடமொழியில் வழங்கப்படுகின்றது. EPIC என்ற ஆங்கிலச் சொல் EPOS என்ற கிரேக்கச் சொல்லின் அடியாகத் தோன்றியதாகும். 'காப்பிய காலம்' என்று கூறுமளவிற்குச் சோழர் காலத்தில் காப்பியங்கள் அதிகமாக எழுந்தன. இக்காலத்தில் காப்பியங்கள் அதிகம் எழுந்தமைக்குக் கூறப்படும் பல காரணங்களுள் காப்பியத்திற்குரிய இலக்கண நூல்கள் எழுந்தமை, வடமொழியின் அதீத செல்வாக்கு ஏற்பட்டமை என்பவையும் அடங்கும். சோழர் காலத்தில் காப்பியம் உச்ச வளர்ச்சிபெற்று விளங்கியபோதிலும் பிற்காலத்தில் படிப்படியாகச் செல்வாக்கிழக்கத் தொடங்கியது. 'காவிய நெறியின் வீழ்ச்சியானது பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் அதலபாதாளத்தை எட்டுகிறது. அதாவது காவியம் அடியோடு மறைந்து சிறு பிரபந்தங்களே கற்றோர் கருத்தைக் கவர்கின்றன' (க.கைலாசபதி, 1999:6). எனினும் தமிழில் நீண்ட காலம் செல்வாக்குப் பெற்று விளங்கிய இலக்கிய வடிவமே காப்பியம் என்பதை மறுதலிக்க முடியாது.

வடமொழித் தாக்கத்திற்குட்பட்ட வகையில் சோழர் காலத்தில் காப்பியங்கள் எழுவதற்கு முன்னரே சங்க மருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இருபெருங் காப்பியங்கள் தோன்றியுள்ளமை அறிந்த தொன்றாகும். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார், காப்பிய இலக்கிய வகை தமிழ் மரபைச் சார்ந்தது என்று குறிப்பிடுகின்றார். மேலும் குவிந்துசெல்லும் மெல்லிய ஓசையுடைய சொற்களாலும் பரந்துசெல்லும் வல்லிய ஓசையுடைய சொற்களாலும் இயற்றப்படுவது(1), அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளோடு வீடு என்னும் விழுமிய பொருளும் உணரும்படி படைக்கப்படுவது(2), ஆசிரியப்பா, வெண்பா, வெண்கலிப்பா மற்றும் இவை போன்ற பல்வேறுபட்ட செய்யுள்களால் உருவாக்கப்படுவது(3) என்றும் குறிப்பிடுகின்றார். தமிழின் தொன்மை வாய்ந்த இலக்கண நூலாகிய தொல்காப்பியம் 'தொடர்நிலைச் செய்யுள்' என்று குறிப்பிடுகின்றது. இவற்றின்படி சங்ககாலத் தனிநிலைச் செய்யுளமைப்பு சங்கமருவிய காலத்தில் தொடர்நிலைச் செய்யுளாக வளர்ச்சிபெற்ற சூழ்நிலையில் கதையை இன்பமூட்டும் வகையில் தொடர்நிலைச் செய்யுளமைப்பில் பாடும் இலக்கிய வடிவமாகத் தமிழில் காப்பியம் எழுந்ததெனலாம். இதன்படி தமிழுக்குக் காப்பியம் பழையதேயாகும் எனினும் காப்பிய இலக்கணம் பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே தெளிவாக முன்வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவ்விதத்தில் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல் முதலான இலக்கண நூல்கள் காப்பியத்திற்கு இலக்கணம் கூறுகின்றன. எனினும் தண்டியலங்காரமே தெளிவான இலக்கணத்தை முன்வைக்கின்றது. அதனடிப்படையில் தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம் குறித்ததாகவே இக்கட்டுரை அமைகின்றது.

அணியிலக்கணம் கூறும் முதன்மை இலக்கண நூல் தண்டியலங்காரமாகும். தண்டி என்னும் புலவரால் இயற்றப்பட்டமையால் இப்பெயரைப் பெற்றது என்பர். இது 'காவ்யதர்சம்' என்ற வடமொழி இலக்கண நூலை முதன் நூலாகக்கொண்டு இயற்றப்பட்டதென்பர். சோழர் காலத்தில் குறிப்பாக 12ஆம் நூற்றாண்டில் எழுந்ததென நம்பப்படும் இந்நூல் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. தற்சிறப்புச் செய்யுள், காப்புச் செய்யுள் என்பவை நீங்கலாக 125 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. பொதுவணியியலில் செய்யுள் வகை, செய்யுள் நெறி பற்றி எடுத்துக்கூறப்பட்டுள்ளது. காப்பியம்பற்றிய வரைவிலக்கணம் இப்பகுதியிலேயே எடுத்துக்கூறப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள், தொகை நிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் எனச் செய்யுள் வகை நான்காகும்(நூற்பா.2) என்று குறிப்பிடும் தண்டியலங்காரம்,

பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை *(பொது.6)*

என்பதன்மூலம் பொருள்பற்றியும் சொல்பற்றியும் தொடர்நிலைச் செய்யுள் இருவகைப்படும் என்கிறது. அதாவது பொருள் தொடர் நிலைச் செய்யுள், சொற்றொடர் நிலைச் செய்யுள் என்கிறது. இதனைத் தொடர்ந்து

பெருங்காப்பியமே காப்பியம் என்று ஆங்கு
இரண்டாய் இயலும் பொருள்தொடர் நிலையே *(பொது.7)*

என்பதன்மூலம் காப்பியத்தை இருவகைப்படுத்திக் கூறுகின்றது. குறிப்பாகப் பெருங்காப்பியம் என்றும் காப்பியம் என்றும் இருநிலைப்படுத்துகின்றது. இதில் பெருங்காபபியம் என்பதற்குக் குறிப்பிடுகின்ற வரைவிலக்கணம் முக்கியமானதாகும். அந்நூற்பா வருமாறு:

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி, முன்வரவு இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து,
நன்மணம் புணர்த்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியில் களித்தல் என்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவு இகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப . *(பொது.8)*

இதன்படி, பெருங்காப்பியத்தில் அடங்கவேண்டியனவாகப் பின்வருவன கூறப்படுகின்றன:

(1) வாழ்த்து (2) தெய்வம் வணங்குதல்

(3) நூலினுள்ளே நவிலப்புகும் பொருளின் சாரத்தை முதலில் அறிவுறுத்தல். (வருபொருள் உரைத்தல்)

(4) அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வகையான நெறிகளையும் உரைப்பதாக விளங்குதல்.

(5) காவியத்தில் வரும் நாயகன் தனக்கு நிகராக வேறு ஒருவரும் இல்லாதவாறு தனிச்சிறப்புடைய வனாகவும் எல்லோர்க்கும் நன்மை செய்பவ னாகவும் பிறர் தீங்கினைத் தீர்த்து நலம் விளைவிப்பவனாகவும் அவ்வாறு செய்யப் புகும்போது தன்னுடைய ஆணையின் சிறப்பு அல்லது தன் ஆற்றலின் சிறப்புத் தோன்று மாறும் விளங்குதல் வேண்டும். (தன்னிகரற்ற தலைவனைப் பாடல்).

(6) மலை, கடல், நாடு, நகர், பெரும்பொழுதுகள், சிறுபொழுதுகள், சந்திர உதயம், சூரிய உதயம். இவற்றினைப் பாடுதல்.

(7) திருமண விழா, முடிசூட்டிக்கொள்ளும் விழா ஆகிய விழாக்கள்பற்றிப் பாடுதல்.

(8) தோட்டத்தில் விளையாடுதல், நீரில் விளையாடுதல், கள்ளுண்டு இன்புறல் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபடுதல்.

(9) மக்கட்பேற்றின் சிறப்பினை உரைத்தலும் அதன் வழி மகிழ்தலும்.

(10) தலைவன் தலைவி ஊடலில் புலத்தல்.

(11) கூடலில் இன்புறுதல்.

(12) நல்ல நடையில் பாடப்படுதல்.

(13) அமைச்சர்களுடன் ஆலோசனைசெய்தல்.

(14) தூது சென்று செய்திகளை உரைத்தல்.

(15) போருக்குச் செல்லல்.

(16) போர் நடத்துதல்.

(17) போரில் வெற்றி ஈட்டல்.

(18) நாடகம் போல, ஒரு சிறந்த தொடக்கம், நடுப்பகுதி, முடிப்பு என்ற மூன்று அமைப்புக்கள் இருத்தல்.

(19) சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் போன்ற உட்பிரிவுகளைப் பெறல்.

(20) சுவையாக இருத்தல்.

(21) உணர்ச்சி அல்லது மெய்ப்பாடு வெளிப்படுமாறு பாடப்படல்.

(22) கற்றோனால் எழுதப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அமைவதே பெருங்காப்பியம் என்று கூறிவிட்டு,

கூறிய உறுப்பிற் சில குறைந்து இயலினும்

வேறுபாடு இன்று என விளம்பினர் புலவர் (பொது.9)

என்பதன்மூலம் மேற்கூறியவற்றுள் சில இயல்புகள் குறைந்து வந்தாலும் அவை பெருங்காப்பியத்தின் தன்மையாகவே அமையும் என்றும் அதனால் அதன் சிறப்புக் குறையாதென்றும் கூறுகின்றது எனினும் அறம், பொருள், இன்பம், வீடு என்பவை பெருங்காப்பியத்திற்கு அவசியமென்பதைப் பின்னோரிடத்தில் கூறும் விளக்கத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

தண்டியலங்காரம் சிறுகாப்பியம் என்ற சொற்றொடரைக் கையாளவில்லை. காப்பியம் என்றே குறிப்பிடுகின்றது. (இது சிறு காப்பியம் என்பதையே சுட்டுகிறதெனலாம்.) அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு நிலைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேலும் உள்ள நிலைகள் குறைவாகக் கொண்டு விளங்கும் நூல் காப்பியம் எனக் கருதப்படுமே என்கிறது தண்டியலங்காரம்:

அறமுதல் நான்கினும் குறைபாடு உடையது

காப்பியம் என்று கருதப்படுமே (பொது. 10)

மேலும் பெருங்காப்பியம், காப்பியம் ஆகிய இரண்டும் ஒரே வகைப் பாடலாகவும் பல வகைப் பாடலாகவும் உரை கலந்தனவாகவும் பிறமொழிச் சொற்கள் கலந்தனவாகவும் அமையுமென்பதையும் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. (பொது.11).

இத்தகைய காப்பிய இலக்கணத்தை அடிப்படை யாகக்கொண்டே தமிழில் பெருங்காப்பியம், சிறு காப்பியம் என்ற வகைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் பெருங்காப்பியங் களென்றும் உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய ஐந்தும் சிறுகாப்பியங்களென்றும் வகைப்படுத்தியுள்ளனர். முன்னர் கூறியதுபோல தண்டியலங்கார நூலை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களும் இயற்றப்படவில்லை. இவ்விரு நூல்களும் தண்டியலங்காரத்திற்கு முற்பட்டவை. ஆயினும் அவை பெருங்காப்பியப் பண்புகொண்டவை என்று அங்கீகரிக்கப் பட்டுள்ளன. வடமொழி வழிவந்த தண்டியலங்கார விதிமுறைகளுக்கமைய தமிழ்க் காப்பியங்களை வகைப்படுத்தியமையினாலேயே கம்பராமாயணம், பெரியபுராணம் முதலான சிறப்புமிக்க காப்பியங்கள் காப்பிய வகைப்பாட்டினுள் அடங்கப்பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை பெருங் காப்பியங்கள் என்று கூறப்படுபவை அனைத்தும் தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணங்களை முழுமையாக உள்வாங்கி யுள்ளனவா என்பதும் ஆராயப்படவேண்டியதாகும். இப்பாகுபாட்டி னுள்ளும் சமய நிலை சார்ந்த நுண் அரசியல் செல்வாக்குச் செலுத்தியிருப்பதும் மறுதலிக்க முடியாததாகும். இது குறித்த பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எஸ்.பொ. இது குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார்:

> *கம்பராமாயணம், கம்பர் வைணவ சமயத்தவர் என்ற காரணத்தினாற் காப்பிய வரிசையிற் சேராதா? பெரிய புராணம் சைவத் தமிழ் மணத்தைப் பிழிந்து தருவதினால் காப்பிய வரிசையிற் சேராதா? தமிழ் மரபு வழுவாது, நபிபெருமானாரின் திரு அவதாரத்தைக் கூறுஞ் சீறாப்புராணம் காப்பிய வரிசையிற் சேராதா? தமிழுக்கு எண்ணிறைந்த தொண்டுகளாற்றிய வீரமாமுனிவர் கத்தோலிக்கர் என்ற காரணத்தினால் தேம்பாவணி காப்பிய வரிசையிற் சேராதா? (1997:38-39)*

இவ்வாறான பல விமர்சனங்கள் உள்ளன. இது தனியாக ஆராயப்படவேண்டியதாகும். ஆக, காப்பிய இலக்கிய மரபு தமிழில் நீண்டகாலமாக இருந்துவருகின்றது என்பதும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வடமொழிச் செல்வாக்குக்கு உட்பட்ட காப்பியப் போக்கு முக்கியம் பெற்றுள்ளது என்பதும் காப்பியத்திற்கான இலக்கணம் முன்வைக்கப்பட்ட நிலையில் அதனை அடிப்படையாகக் கொண்டு சோழர் காலத்தில் அதிகமான காப்பியங்கள் எழுந்துள்ளன என்பதும் அக்காப்பியங்கள் பெருங்காப்பியம் - சிறுகாப்பியம் எனப் பகுக்கப்பட்டுள்ளதோடு இந்த வரையறைக்குள் அடங்காதனவாக கம்பராமாயணம், பெரியபுராணம், சீறாப்புராணம், தேம்பாவணி முதலானவை உள்ளன என்பதும் கவனத்திற்கொள்ளப்படவேண்டி யனவாகும்.

உசாத்துணைகள்:

1. இளங்குமரன், இரா., (1999). இலக்கண வரலாறு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
2. கைலாசபதி, க. (1999). தமிழ் நாவல் இலக்கியம், சென்னை: குமரன் புத்தக இல்லம்.
3. சுப்பிரமணியம், வ.த., (தெளிவுரையாசிரியர்). (2008). தண்டியலங்காரம், சென்னை: முல்லை நிலையம்.
4. சௌந்தரபாண்டியன், எஸ்., (1989). தமிழில் காப்பியங்கள், ஸ்ரார் பிரசுரம்.
5. பொ.எஸ்., (1997). பெருங்காப்பியம் பத்து, மித்திர வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை 84இல் கால்பதித்துள்ள தகைசால் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களை வாழ்த்துகின்றோம்

திருகோணமலையில் பிறந்து யாழ்ப்பாணத்தில் மணந்து யாழ்ப்பாணத்திலேயே வாழ்கின்ற தகைசால் வாழ்நாட் பேராசிரியரும் அன்புக்கு உரியவருமான அருணாசலம் சண்முகதாஸ் அவர்கள் கடந்த 02.01.2024இல் தனது 84ஆவது அகவையில் கால்பதித்துள்ளார். இன்னும் தமிழ்ப்பணி ஆற்றிக்கொண்டிருக்கின்ற அவர்கள் இலக்கண உலகிற்கு அருஞ்சேவை ஆற்றுகின்றமையைக் கவனத்திற் கொண்டு 'இலக்கணம்' சஞ்சிகை சார்பில் விசேடமாக அவர்களை வாழ்த்துகின்றோம்.



தகைசால் வாழ்நாட் பேராசிரியர்
அ. சண்முகதாஸ்
Emeritus Professor A. Shanmugathas

திருகோணமலை புனித சவேரியார் கல்லூரி, மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயம் ஆகியவற்றில் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொண்ட இவர், பேராதனையில் அமைந்திருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டங்களையும் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் தமிழ், மலையாளம் மொழியறிஞர் பேராசிரியர் ரொண் ஆஷர் அவர்களின் வழிகாட்டலில் மொழியியலில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

பண்டிதர் வீ. சி. கந்தையா, வியாகரண சிரோமணி ஸ்ரீ தியாகராஜ ஐயர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் ஆ. சதாசிவம், பேராசிரியர் க. கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர் க. கைலாசபதி என்போர் தனக்கு ஆசான்களாக வாய்த்தமையைப் பெரும்பேறாகக் கருதும் இவர் பேராசிரியர் இ. பாலசுந்தரம், பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் துரை. மனோகரன், பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, பேராசிரியர் பால. சுகுமார், கலாநிதி க. இரகுபரன் முதலியோர்க்கு ஆசானாக இருந்தமையைப் பெருமையாகக் கருதுகின்றார்.

பல்கலைக்கழகத்தில் முன்பின்னாகக் கற்றவர்களான பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் பொ. பூலோகசிங்கம், பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை என்போரைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார்.

இவர் தமிழ்மொழியுடன் - இலக்கணத்துடன் தொடர்புபட்ட நூல்களையும் கட்டுரைகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் படைத்த பெருமைக்குரியவர். நமது மொழியின் இயல்புகள், தமிழ்மொழி இலக்கண இயல்புகள் (3 பதிப்புக்கள்), தமிழ்மொழியும் ஜப்பானிய மொழியும்: இலக்கண ஒப்புமை, ஈழகேசரித் தமிழ், தமிழின் பா வடிவங்கள், மொழியியலும் பிற துறைகளும் ஆகிய நூல்களையும் "நாடக வழக்கும் உலகியல் வழக்கும்", "மொழியியல் நோக்கில் நாவலர்", "சுவாமி ஞானப்பிரகாசரும் மொழியாய்வும்" முதலிய கட்டுரைகளையும் தமிழிலே தந்த பெருந்தகை இவர்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட Tamil என்னும் நூலின் இணையாசிரியர்களுள் ஒருவர் இவர்; மற்றையவர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் என்பதும் அவ்வாறே Tamil - Japanese Relationship (தமிழ் - ஜப்பானிய மொழிகளையும் பண்பாடுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து ஆங்கிலத்தில் எழுதப்பட்டது.) என்னும் நூலின் இணையாசிரியர்களுள் ஒருவர் இவர்; மற்றையவர் இவரின் மனைவியாகிய பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும். இதைத் தவிர சில நூல்களையும் பல கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதி, தமிழ்மொழியின் இலக்கண அமைப்புக்களை - சிறப்புக்களை உலகறியச் செய்திருக்கின்றமையும் விதந்து கூறப்படவேண்டிய விடயங்களாகும்.

நைஜீரியா இபாடன் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியலையும் ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழகத்தில் பொது மொழியியலையும் கற்பித்த சிறப்புக்குரியவராவார். மேலும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் கடமைபுரிந்து உத்தியோக பூர்வமான பணியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டாலும் தொடர்ந்து தமிழ்மொழிக்காக உழைத்துக்கொண்டிருக்கும் இலக்கண ஆசான் தகைசால் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தமது பணியை மேலும் தொடர்வாராக; தேக ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தால் 2020இல் 'இலக்கண விருது' வழங்கி கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களை வாழ்த்துவதில் 'இலக்கணம்' சஞ்சிகை பெருமைகொள்கின்றது.

த. யுவராஜன், ஆசிரியர் - இலக்கணம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கணச் செயலிகள் எனும் புது உலகம்

முனைவர் ஞா. குருசாமி
(Dr. G. Gurusamy)
தமிழ்ப் பேராசிரியர்,
அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்,
மதுரை - 625 514, தமிழ்நாடு, இந்தியா.

இலக்கண வகுப்பில் இலக்கண நூலின் நூற்பாக்களை உரையாசிரியர் தரும் சான்றுகளைக் கொண்டு விளக்குவது நீண்ட காலமாக இருந்துவரும் கற்பித்தல் நடைமுறை. சிலர் சமகால எழுத்து, பேச்சு வழக்கிலிருந்து சான்றுகாட்டியும் விளக்குவர். சொற்களின் புணர்ச்சி, திரிபு ஆகியவற்றைத்தான் வெவ்வேறு ஈறுகளைக் கொண்டு விரிவாகக் கற்பிப்பார்கள். இதன் நோக்கம் மொழியின் அமைப்பைப் புரியவைத்தல். அது புரிந்து விட்டால் பழம்பாட்டுகளின் பொருளை விளங்கிக்கொள்ள முடியும் என்ற கணிப்பின் வகைப்பட்ட நிலைப்பாடு அது.

இலக்கணம், கணிதத்தைப் போன்று மிகவும் நிதானத்துடன் புரிந்துகொள்ள வேண்டிய தனிவகைப் படிப்பாகும். அது ஒரு சங்கிலித் தொடர் போல ஒன்றைத் தொட்டு ஒன்றைத் தொட்டுப் புரிந்துகொள்ளும் தன்மை கொண்டது. இலக்கணத்தில் ஓரிடம் புரியவில்லை என்றால் அது தொடர்பான எந்தச் செய்தியையும் புரிந்துகொள்ள முடியாது. உதாரணமாக, செய்கை இலக்கணப்பகுதியில் குறிப்பிட்ட ஒருசொல் சாரியை பெற்றுப் புணருவதைத் தொடக்கத்தில் புரிந்துகொள்ளவில்லை என்றால் அச்சொல்லைத் தழுவி பின்னால் வரும் எந்த நூற் பாவையும் விளங்கிக்கொள்ள முடியாது. அதனாலேயே இலக்கணத்திற்குக் கல்விப்புல ஆராய்ச்சிகளில் மாணவர்கள் போதிய அளவு கவனம் செலுத்துவதில்லை. ஒரு கட்டத்திற்குமேல் இலக்கணத்தில் புதியதாக ஆராய்ந்து சொல்வதற்கு ஒன்றுமில்லை என்ற மனநிலையும் இலக்கணம் குறித்த கவனமின்மைக்குக் காரணமாகும். அந்த நிலை மாறத்தொடங்கியிருக்கிறது. இலக்கணத்தைப் புரிந்துகொள்ள இருந்த சிரமங்கள் இனி வேண்டியதில்லை. கசப்பான உணர்வுடன் இலக்கண வகுப்பில் உட்கார்ந்து கற்றுக்கொள்ளும் அந்த முறைமை இனியும் தொடரும் என உறுதியாகச் சொல்வதற்கில்லை.

மொழியைப் புரிந்து பயன்படுத்துவதற்குத் தேவைப்படும் முக்கியமான அடிப்படை இலக்கணங்கள் முழுமையும் விளையாட்டு போல கற்றுக்கொடுக்கப்படும் / கற்றுக்கொள்ளப்படும் நிலைக்கு உலகம் வந்துவிட்டது.

முன்னெப்போதும் இல்லாதபடி இலக்கணப் பாடம் எளிமைப்படுத்தப்பட்டுவிட்டது. தமிழ் இலக்கணத்தைக் கற்றுகொள்வதற்கு ஆசிரியர்கள் தேவையில்லை. ஆர்வம் மட்டுமே வேண்டும். அதற்கான அனைத்து வாய்ப்புகளும் இணையத்தில் இருக்கின்றன. யார் வேண்டுமானாலும் என்ன மொழியாக இருந்தாலும் அவற்றைக் கற்றுக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்டதாக இணையம் வடிவமைக் கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு மொழிக்கல்வி என்பதன் பயனும் நோக்கமும் கற்றல் கற்பித்தலின் வழிமுறையும் முற்றாக மாறிவிட்டன. காகிதமற்ற வகுப்பறைச் சூழல் வெகு தூரத்தில் இல்லை. பேனா, பென்சில் பயன்பாடும் மெல்லமெல்லக் குறையும். விரல் பிடித்து எழுதப் பழக்கும் வேலைக்கு அவசியமில்லை. திறன்பேசிகளின் திரைகளைத் தொடத் தெரிந்தால் போதுமானது என்ற நிலை உருவாகியுள்ளது.

இப்போது தமிழகத்தில் பல தனியார் பள்ளிகள் தமிழ் வகுப்புகளில் இலக்கணத்திற்கென்று செயலிகளைப் (Tamil Grammar Apps) பயன்படுத்தத் தொடங்கிவிட்டன. ஒரேயொரு செயலி தேர்வு நடத்துவது, மதிப்பெண் வழங்குவது, தேர்வு முடிவைப் பெற்றோருக்கு அனுப்பி வைப்பது, மதிப்பெண் பட்டியல் தயாரித்துப் பராமரிப்பது என, சில ஆசிரியர்கள், அலுவலர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகளை மிகத் துல்லியமாகக் குறைந்த நேரத்தில் செய்துவிடுகிறது. நீண்ட காலமாக இருந்துவந்த 'பாடப்புத்தகம் – ஆசிரியர் – மாணவர்' என்ற வைப்புமுறையில் பாடப்புத்தகத்தின் இடத்தை இன்று செயலிகள் கைப்பற்றி வருகின்றன. கல்லூரிகளிலும் கரும்பலகையின் இடத்தில் கணினி ஒளித் திரைகள் (Projector Screen) வந்துகொண்டு இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கணம் சார்ந்து படம் பார்த்துப் பெயரைச் சொல்லுதல், கண்டு பிடித்தல், சிறு குறிப்புகள் வழி முழுச்சொற்களை அறிதல், சொல்லுக்குள் இருக்கும் வேறு சொற்களைக் கண்டுபிடித்தல், சொற்களின் வகைகளை அறியும் சொல் விளையாட்டு, ஒரு சொல்லின் பலபொருளை அறிதல், பலசொல்லின் ஒரு பொருளை அறிதல், எதிர்ச்சொல்லைக் கண்டுபிடித்தல், சொற்களைச் சீர்படுத்தி அமைத்தல், புதிருக்குப் பதில் தருதல், ஒற்றுப்பிழை திருத்துதல், ஒரு சொல்லில் விடுபட்ட எழுத்துகளைக் கண்டுபிடித்தல், இணைச்சொற்களைப் பொருத்துதல், முரண்சொற்களைப் பொருத்துதல், வினாடி வினா, சொல்லில் / தொடரில் இடம் மாறிக் கிடக்கும் எழுத்துகளைச் / சொற்களைச் சரியான இடத்தில் வைத்தல், தொடரில் விடுபட்ட சொற்களைக் கண்டுபிடித்தல் என்பதாகச் செயலிகள் வந்துவிட்டன. அவற்றுள் 'மழலைமொழி', 'சொல் ஆக்கு', 'மாயக்கட்டம்', 'கண்டுபிடி', 'சொல்லிஅடி', 'வார்த்தை விளையாட்டு', 'சுட்டி தமிழ் அரிச்சுவடி', 'Simply Learn Tamil', 'Learn Tamil Alphabet Writing', 'Tamil Crossword Game', 'Tamil Word Game', 'Tamil Word Search Game', 'Ilakkanam', 'Tamil Ilakkanam' 'Tamil Quiz Game', 'Learn Tamil Easily', 'Tamil Learn And Write', 'Learn Tamil Quickly', 'Tamil Alphabet for Kids', 'Kids Tamil', 'Writing Tracing - Read Tamil', 'Write Tamil Letters', 'Magic Box Tamil' முதலியவை குறிப்பிடத்தக்கன. இந்தச் செயலிகள் அனைத்தையும் இலவசமாகத் தரவிறக்கிக்கொள்ளலாம். தமிழ் இலக்கணத்தை வேறு மொழிகளின் வழியாகக் கற்றுக்கொள்வதற்கான வசதிகளும் உண்டு. அவற்றுள் Learn Tamil from Hindi, Tamil Grammar in English, Learn Tamil from Malayalam என்பன சில செயலிகள்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பிய நாடுகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு ஆர்வத்தின் பெயரில் தமிழ் கற்க வருவோர் 'Learn Tamil through English' என்னும் செயலி வழியாகப் பயிற்சிகளை மேற்கொண்டனர். இப்பொழுது வட இந்தியாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு வேலை செய்ய வருவோரில் படித்தவர்களிடம் இந்தச் செயலிகளின் புழக்கம் அதிகமிருக்கின்றன. ஒரு பொருளின் தமிழ்ப் பெயரை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் அந்தப் பொருளைப் படம்பிடித்து இலக்கணச் செயலியில் பதிவேற்றம் செய்தால், அது திருத்தமான உச்சரிப்பில் அப்படத்தின் தமிழ்ப் பெயரைச் சொல்கிறது. வட, வட கிழக்கு இந்திய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டோர் தமிழ்நாட்டின் சில கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். அவர்களில் தமிழ்மொழியின் அடிப்படைகளை விருப்ப மொழிப்பாடமாகத் தேர்ந்து படிக்கிறவர்களுக்கு 'Learn Tamil Vocabulary Easily', 'Hindi to Tamil Dictionary', 'Learn Tamil - Speak Tamil', 'தமிழ்ச்சொல் வங்கி' உள்ளிட்ட சில செயலிகள் பெருமளவில் துணைசெய்கின்றன.

ஒவ்வோர் இலக்கணக் கூறுக்கும் ஒரு செயலி என்பது தவிர்த்து, எல்லா இலக்கணக் கூறுகளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட செயலிகளும் வரத் தொடங்கிவிட்டன. அவற்றுள் ஒன்று 'சொல்லி அடி' எனும் செயலி. இதில் பார்வையற்றவர்களுக்கு ஏற்றவகையில் மொழி / ஒலிபெயர்ப்பு வசதிகள் உண்டு. தமிழ்ச் சொல்லுக்கு நிகரான சொல்லை இன்னொரு மொழியில் கண்டுபிடித்துத் தரும் வசதி இருக்கிறது. இதனால் தனிப்பட்ட நபர்கூட ஒரு செயலியை மட்டும் வைத்துக் கொண்டு சில நூறு நபர்கள் எழுதக்கூடிய இலக்கணத் தேர்வைச் செலவின்றி ஒருங்கிணைக்க முடியும். அதற்கு 'Exam Preparation: Mock Tests' என்னும் செயலி உள்ளிட்டு பல உள்ளன. இதைவிடக் கூடுதல் சிறப்பு, சில செயலிகளில் தமிழ் அகராதிகள் இணைக்கப்பட்டிருக் கின்றன. அது சொல்லுக்குப் பொருள் தருவதோடு மட்டும் அல்லாமல் தமிழ்ச் சொல்லையும் பிறமொழிச் சொல்லையும் பிரித்துக் காட்டுகிறது. குறிப்பிட்ட அந்தப் பிறமொழிச் சொல் எந்த மொழியிலிருந்து எந்த நூற்றாண்டில் யாரால் தமிழுக்குக் கொண்டுவரப்பட்டது என்ற தகவலையும் தருகிறது. 'தமிழில் வடமொழிக் கலப்புச் சொற்கள்', 'தமிழில் பிறமொழிக் கலப்புச் சொற்கள்' என்பன அந்த வகைச் செயலிகள். இது மொழி / இலக்கணக் கற்பித்தலில் மாபெரும் வளர்ச்சி.

இச்செயலிகள் தொல்காப்பிய, நன்னூல் விதிகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்நூல்களைக் கொண்டு கற்பிக்கும் போது இருக்கும் ஒருவித இறுக்கம் இச்செயலிகளைப் பயன்படுத்தும் போது இல்லை. மாறாக, அவை அதீத விளையாட்டுச் சாயலைக் கொண்டிருக்கின்றன. அது கற்போரை / மாணவர்களை உற்சாகத்துடன் இலக்கண அறிதலில் ஈடுபட வைக்கிறது. இந்தப் புள்ளிதான் செயலிகள் வெற்றிபெறுகிற இடம்.

மாணவர்களுக்கு ஏற்கனவே திறன்பேசிகளை (Smart Phones) நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்திருப்பதால் இலக்கணச் செயலிகளுக்கு அவர்கள் இயல்பாகவே தகவமைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் அறிதிறன் வேகத்திற்கு ஈடுகொடுக்க ஆசிரியர்கள் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும். அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் கணினிவழிக் கற்பித்தல் அறைகள் (Smart Class Rooms) இருக்கின்றன. அரசுப் பள்ளிகளிலும் அவை விரைவில் வரலாம். புத்தகங்களை விடுத்து, செயலிகள்வழி கற்பிப்பதால் இன்றைய மாணவர்களுக்கு இலக்கணத்தை அவர்கள் விரும்புகிற வகைகளில் கொண்டு செல்ல வாய்ப்பு உருவாகி இருக்கிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் இப்புதிய தொழில் நுட்பத்தை முழுமையாகப் பயன் படுத்தும் போது அவர்களின் கைகளில் புதிய உலகம் சுழன்றுகொண்டிருக்கும்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பிலக்கணம் - தொடர் 2

முனைவர் பி. பாலசுப்பிரமணியன்
(Dr. P. Balasubramanian)
உதவிப் பேராசிரியர் & ஆய்வு ஒருங்கிணைப்பாளர்,
முதுகலைத் தமிழாய்வுத் துறை,
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி,
வாணியம்பாடி, திருப்பத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

1. உறுப்பியல்

யாப்பருங்கலக்காரிகையின் முதல் இயலாக அமைந்திருப்பது உறுப்பியல். உறுப்புகளின் இயல்பை, இலக்கணத்தைக் கூறுவதால் இதனை உறுப்பியல் என்பர். உறுப்பியல் என்பது காரணப் பெயராக அமைகிறது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறு உறுப்புகள் இவ்வியலில் அடங்கியுள்ளன. இவை செய்யுள் இயற்றுவதற்கு அடிப்படையாக அமைவதால் செய்யுள் உறுப்புகள் என அழைக்கப்படுகின்றன.

(அ) எழுத்து

மொழிக்கு முதற்காரணமாகிய ஒலி எழுத்து. இது செய்யுள் உறுப்புகளில் முதன்மையானது. எழுத்து என்னும் உறுப்பு அசை என்னும் உறுப்பிற்கு அடிப்படையாக அமைகிறது.

எழுதப்படுதலால் இதனை எழுத்து என்பர். அனைத்து உறுப்புகளுக்கும் முதன்மைக் காரணமாகவும் அசைக்கு இன்றியமையாத உறுப்பாகவும் எழுத்து விளங்குகிறது.

குறில்நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்தமெய்யே
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞர் உரைத்த அளபும் அசைக்குறுப் பாவனவே.

மேற்கண்ட காரிகைப் பாடல்வழி யாப்பருங்கலக்காரிகை குறில், நெடில், உயிர் (ஆவி), குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம் (குறுகிய மூவுயிர் - குறுகி ஒலிக்கும் மூன்று உயிர் எழுத்துகள் - இ, உ, ஐ), ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம் (மறுவறு மூவினம் - உயிர்மெய்யானாலும் இப்பெயர்களாலேயே வழங்கப்படும்), உயிர்மெய் (மைதீர் உயிர்மெய் - ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்யின் அளவெனக் கொள்ளப்படும்), அளபெடை ஆகியவற்றை எழுத்தின் பதின்மூன்று வகைகளாகப் பதிவுசெய்கிறது.

'மதிமருட்டும் சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்' என்பது மகடூஉ முன்னிலை. அதாவது, அறிவை மயக்கக்கூடிய பிறை போன்ற சிறிய நெற்றியையும் போர் செய்கின்ற அழகிய பெரிய கண்களையும் சிவந்த இதழையும் சிறு இடையையும் கொண்ட பெண்ணே என விளித்து அவளிடம் எழுத்திற்குரிய பதின்மூன்று வகைகளைச் சொல்வதாக இந்தக் காரிகை அமைந்துள்ளது. அறிஞர் உரைத்த அளபு என்பது எழுத்துகளின் மாத்திரையைக் குறிப்பதாகும் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எழுத்தின் உறுப்புகள்

எழுத்து - 13 (அசையை நுட்பமாக விளக்குவதற்கு இப்பிரிவுகள் தேவைப்படுகின்றன)

1. குறில் - 5 (அ, இ, உ, எ, ஒ) - 1 மாத்திரை அளவுடையது.

2. நெடில் - 7 (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) - 2 மாத்திரை அளவுடையது.

3. உயிர் - 12 (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)

4. குற்றியலிகரம் (37)

குற்றியலுகரம் நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் யகரம் வந்தால் உகரம் இகரமாகத் திரியும். அங்கு இகரம் தன்னுடைய ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவாய்க் குறுகி ஒலிக்கும்.

சான்று : நாகு + யாது = நாகியாது, எ∴கு + யாது = எ∴கியாது

இங்கு 'கி' என்பதில் உள்ள இகரம் அரை மாத்திரை அளவினதாக ஒலிக்கும். இது புணர்மொழிக்கண் வரும் குற்றியலிகரமாகும். மியா என்பதில் உள்ள இகரம் தனிமொழிக்கண் வரும் குற்றியலிகரமாகும் .

(கேள் + மியா = கேண்மியா, செல் + மியா = சென்மியா).

குற்றியலுகரத்தால் அமையும் குற்றியலிகரம் - 36 (புணர்மொழிக்கண் வரல்)

தனிமொழிக்கண் வரும் குற்றியலிகரம் - 1

மொத்தம் குற்றியலிகரம் - 36 + 1 = 37

5. குற்றியலுகரம் (36)

தனி நெட்டெழுத்து ஏழும் ஆய்தம் ஒன்றும் ஔகாரம் நீங்கிய உயிரெழுத்துகள் பதினொன்றும் வல்லினம் ஆறும் வகரம் நீங்கிய இடையினம் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு எழுத்துகளுள் ஒன்று இறுதி எழுத்துக்கு முன் எழுத்தாக அமையும். அவ்வாறு அமைகிற போது, இறுதி வல்லின எழுத்தின்மீது ஊர்ந்து வரும் உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரையளவாய்க் குறைந்து ஒலிக்கும். ஈற்றயல் எழுத்துக்கு முன்னே ஒன்றும் பலவுமாகிய எழுத்துகள் தொடர்ந்து வரும். இது ஆறு வகைப்படும்.

1. நெடில் தொடர் - (7) - நாடு
2. ஆய்தத் தொடர் - (1) - எ∴கு
3. உயிர்த்தொடர் - (11) - விறகு (ஔ தவிர்த்து)
4. வன்தொடர் - (6) - பாக்கு
5. மென்தொடர் - (6) - மஞ்சு
6. இடைத்தொடர் - (5) - கொய்து (வ தவிர்த்து)

இவையனைத்தையும் கூட்டுகிற போது, குற்றியலுகரம் மொத்தம் முப்பத்தாறாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஐகாரக்குறுக்கம் (3)

‘ஐ’ காரம் தனித்து வரும்போது தன்னுடைய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிக்காது. ஆனால், சொல்லில் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களில் வரும்போது தனது இரண்டு மாத்திரையிலிருந்து ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரை அளவாகவும் குறுகி ஒலிக்கும். ஆக, இடம் நோக்க ஐகாரம் மூன்று வகைப்படும்.

சான்று : ஐப்பசி, இடையன், குவளை.

7. ஆய்தம் - 1 (ஃ) - அரை மாத்திரை அளவுடையது.

8. மெய் - 18 (க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்)

9. வல்லினமெய் - 6 (க், ச், ட், த், ப், ற்) - அரை மாத்திரை அளவுடையது.

10. மெல்லின மெய் - 6 (ங், ஞ், ண், ந், ம், ன்) - அரை மாத்திரை அளவுடையது.

11. இடையின மெய் - 6 (ய், ர், ல், வ், ழ், ள்) - அரை மாத்திரை அளவுடையது.

12. உயிர்மெய் - 216 (உயிர் 12 X மெய் 18 = 216) – உயிர்க்குறில், உயிர்நெடிலுக்கு உரிய மாத்திரை அளவே உயிர்மெய்க்குமான மாத்திரையாகும்.

13. அளபெடை - இது இரண்டு வகைப்படும் - உயிரளபெடை (இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை), ஒற்றளபெடை. உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை, ஒற்றளபெடைக்கு மாத்திரை ஒன்று.

அளபெடை

செய்யுளில் ஓசை குறையும் போது அதனை ஈடுசெய்ய எழுத்துகள் தனக்குரிய மாத்திரையிலிருந்து மிகுந்து ஒலிக்கும். இதற்கு அளபெடை என்று பெயர். செய்யுளில் ஓசை இன்பத்திற்காக எழுத்துகள் அளபெடுக்கவில்லையென்றால் செய்யுளில் உள்ள சீரும் தளையும் சிதைந்து போகும். செய்யுளில் உயிர் நீண்டு ஒலித்தால் உயிரளபெடை, ஒற்றுகள் நீண்டு ஒலித்தால் ஒற்றளபெடை எனப்படும்.

உயிரளபெடை (21)

செய்யுளில் ஓசை குன்றும் போது சொல்லுக்கு முதல், இடை, ஈற்றில் நின்ற நெட்டெழுத்துகள் ஏழும் அவ்வோசையை நிறைவிக்கத் தத்தம் மாத்திரையிலிருந்து மிகுந்து ஒலிக்கும். அப்போது, அவை இனக்குற்றெழுத்துகளைக் குறியாகப் பெறும். (ஆஅ, ஈஇ...). இனமில்லாத ‘ஐ’காரம் ‘இ’கரத்தையும் ‘ஔ’காரம் ‘உ’கரத்தையும் இனமாகப் பெறும். உயிரளபெடை பல வகையில் அமையும் என்பர் இலக்கண அறிஞர்கள்.

அசைநிறை அல்லது இசைநிறை

செய்யுளில் சீரும் தளையும் சிதையாமல் இருக்க அளபெடுப்பதை இசைநிறை அளபெடை என்பர். இதனை செய்யுளிசை அளபெடை என்று அழைப்பர்.

சான்று : உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. (குறள் எண் - 1200)

இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை கெடாத போதும் இனிய ஓசையைப் புலப்படுத்துவதற்காக நெட்டெழுத்துகள் கூட்டி ஒலிப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

சான்று :

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. (குறள் எண் - 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிசை அளபெடை

சொல்லின் பொருளை வேறுபடுத்துவதற்காக அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும். பெயர்ச்சொல்லை வினை எச்சமாக மாற்ற வருவது சொல்லிசை அளபெடையாகும்.

சான்று : உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்

வரல்நசைஇ இன்னும் உளேன். (குறள் எண் - 1263)

சில உரையாசிரியர்கள் வேறுபாட்டு அளபெடை, இயற்கை அளபெடை என்றும் இதனை விரித்துக் கூறுவர்.

வேறுபாட்டு அளபெடை – தழுவி – தழீஇ, *இயற்கை அளபெடை* – ஆடூஉ, மகடூஉ, மரூஉ.

நெட்டெழுத்துகள் ஏழும் மொழி முதல், இடை, கடையில் வந்து அளபெடுக்கும்.(7 X 3 = 21)

இதில் 'ஔ'காரம் இடையிலும் ஈற்றிலும் அளபெடுக்காது. எனவே, இதனுள் 2ஐக் கழிக்க மொத்தம் 19 ஆகும். இதனுடன் சொல்லிசை, இன்னிசை அளபெடைகளைச் சேர்த்தால் மொத்தம் 21 வரும். எனவே, உயிரளபெடையை மொத்தம் 21 என்பர்.

ஒற்றளபெடை (42)

செய்யுளில் ஓசை குன்றும் போது ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் மெல்லெழுத்துகள் ஆறும் வ், ய், ல், ள் என்னும் இடையெழுத்துகள் நான்கும் ஆய்தம் ஆகிய பதினொரு எழுத்துகளும் அளபெடுக்கும். இவை, குறிற்கீழும் குறிலிணைக்கீழும் மொழிக்கு இடையிலும் ஈற்றிலும் அளபெடுக்கும். அதற்கு அடையாளமாக அம்மெய்களின் பின் அந்தந்த மெய்களும் ஆய்தத்தின் பின் ஆய்தமும் எழுதப்பெறும்.

பத்து மெய்யெழுத்துகளும்,

1. குறில்கீழ் (குறிலையடுத்து) இடை – எங்ங்கு
2. குறிலிணைக்கீழ் (இரு குறிலையடுத்து) இடை - இலங்ங்கு
3. குறில்கீழ் (குறிலையடுத்து) ஈறு – நங்ங்
4. குறிலிணைக்கீழ் (இரு குறிலையடுத்து) ஈறு – மடங்ங்

என அமைந்தால் 10 X 4 = 40 ஆகும்.

இதனுடன் ஆய்தம்,

1. குறில்கீழ் (குறிலையடுத்து) ஆய்தம் இடை – எஃஃகு
2. குறிலிணைக்கீழ் (இரு குறிலையடுத்து) இடை – விலஃஃகு

ஆய்தம் இடையில் மட்டும் வரும். ஈற்றில் வராது. எனவே, 40 உடன் இவை இரண்டையும் சேர்க்க ஒற்றளபெடை 42 ஆகும்.

- யாப்பருங்கலம் நூல் குறிப்பிடும் எழுத்தின் வகைமைகள் யாவை?

யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடும் எழுத்தின் வகைகள் பதின்மூன்றுடன் ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகிய இரண்டையும் சேர்த்து யாப்பருங்கலம் எழுத்தின் வகைகள் பதினைந்து (15) என்று குறிப்பிடும்.

நன்னூல் எழுத்ததிகாரத்தில் எழுத்துகள்பற்றி ஏற்கனவே, முறையாகப் படித்திருந்தாலும் யாப்பிலக்கணத்திற்கு அடிப்படையாய் அமையும் எழுத்துகளின் வகைகளைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டால் மட்டுமே அசையின் இலக்கணம், அசையின் வகைகள், அசை பிரிப்பதைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியத்தில் பெயரிடல் சிந்தனை

முனைவர் ம. இராமச்சந்திரன்
(Dr. M. Ramachandran)
துறைத் தலைவர், தமிழாய்வுத்துறை,
ஸ்ரீவித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

மொழியின் அடிப்படையான சிந்தனை அமைப்பு, பொருள்களுக்குப் பெயரிடலில் இருந்துதான் ஆரம்பிக்கிறது என்று விட்டி ஹென்ஸ்டீன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இயற்கையின் பல பரிணாம வளர்ச்சியில் மனிதனும் அவனது மொழி உருவாக்கமும் வியக்கத் தக்கதாகவும் சிந்தனைப் புலப்பாட்டுக்கு அப்பாற்பட்டும் இருந்து வந்திருக்கிறது. கார்ல் மார்க்ஸ் அவர்கள், 'உலகின் பெரும் சிந்தனையாளர் யார்?' என்ற கேள்விக்கு 'இலக்கணம் எழுதியவர்களே' என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார். அந்த வகையில் இயற்கை - மனிதன் - ஓசை - மொழி - எழுத்து - சொல் - பொருண்மை என்ற வளர்ச்சிப் போக்கு இன்றைய நவீன சிந்தனைக்கு உட்பட்டு வருவதைக் காண முடிகிறது.

தமிழில் கிடைக்கும் தொன்மையான நூல் தொல்காப்பியம். தமிழ்மொழிக்கு இலக்கணத்தையும் வாழ்க்கை நெறியையும் எடுத்துக்கூறும் நூலாக அது விளங்குகிறது. உலகில் உள்ள செம்மொழிகளில் ஒன்றாகத் தமிழ் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு முக்கியமான காரணங்களில் தொல்காப்பியமும் அதன் சிந்தனை ஒழுங்கும் முக்கியமானவையாகும். அத்தகைய சிறப்புமிக்க தொல்காப்பியம், சொல்லதிகாரம் என்ற பகுதியில் மொழியின் பெயரிடல் மரபைப்பற்றி ஆழமாக எடுத்துக் கூறியுள்ளது. 'மொழி என்பது பெயர் தரும் ஓர் அமைப்பு' என்று கூறுவார்கள் என்று ச.வே. சுப்ரமணியம் கூறுகிறார். எல்லா மொழிகளிலும் பெயர்ச் சொற்களே மிகுதியாக அமையும் என்று சிந்தித்திருக்கிறார்கள்.

தொல்காப்பியமும் சொற்பிறப்பும்

இயற்கையோடு இணைந்த வாழ்க்கையில் தனது அனுபவத்திற்கும் அக மகிழ்ச்சிக்கும் சோகத்திற்கும் கோபத்திற்கும் தனது உணர்வுகளை வெளிப்படுத்த முயன்றதன் வெளிப்பாடே சிந்தனையும் மொழியும். மொழி என்பது சொற்களின் தொகுப்பாகும். இச்சொற்றொகுப்பு உருவாக்கும் பண்புகளைத் தொல்காப்பியர் ஆழமாகச் சிந்தனை செய்துள்ளார். இதனை,

உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆ இரு திணையின் இசைக்குமன் சொல்லே

- தொல். 484

என்பதன் மூலம் தொல்காப்பியரும் அவருக்கு முன்னோர்களும் சொற்களின் உருவாக்கச் சிந்தனையில் ஆழமாகச் சிந்தித்ததும் அது உலகப் பொதுப் புத்திக்கு ஏற்புடையதாக இருப்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். தன் முன்னுள்ள இந்த இயற்கை தனக்கான ஒரு போக்கில் இயங்கிக்கொண்டிருப்பதும் இந்த இயக்கப் போக்குகளை உணர்ந்துகொள்வதும் தற்காத்துக் கொள்வதும் அனுபவத்தைப் பதிவுசெய்துகொள்வதுமான செயற்பாட்டில் பிறந்த சிந்தனையே உலகப் பொருள்களை உயர்திணை என்றும் அஃறிணை என்றும் பிரித்து அவற்றிற்குச் சொற்களை உருவாக்கியதே பெயரிடல் மரபு. மேலும்,

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி - தொல். 485

ஒன்றுஅறி சொல்லே பலஅறி சொல்லென்று -
தொல். 486

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும் - தொல்.511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நூற்பாக்கள் அறிசொல் என்ற கருத்தை முன்வைப்பதை உணர முடியும். அறிசொல் என்பதற்கு ச.வே.சு. அவர்கள் 'குறிக்கும் சொல்' என்று விளக்கம் தருகிறார். ஆக ஒவ்வோர் உயிருள்ள உயிரற்ற பொருள் களையும் குறிக்கும் சொல் என்று சிந்திக்கும் போது அவை பெயர்ச் சொல்லாகவே இருப்பதையும் காண முடிகிறது. அதே வேளையில் உயிருள்ள பொருள்கள் தங்களுக் குள்ளும் மற்ற உயிரற்ற பொருள்களுடனும் வினையாற்றும் போது ஏற்படும் நிலைக்களனையும் முன்வைக்கிறார். இதன் மூலம் ஒரு உரையாடலை உருவாக்குதலும் உரையாடல் புரிதலையும் கருத்துப் பரிமாற்றத்தையும் கொண்டதாக இருப்பதையும் அறிய முடிகிறது.

ஆண் உயிர்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள், பெண் உயிர்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள், இருவரையும் குறிக்கும் பொதுப்பெயர், உயிரற்ற ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல், பல பொருள்களைக் குறிக்கும் பெயர்ச் சொல் என்று தொல்காப்பியர் கூறும் போது பெயரிடல் என்பது முக்கியமான நிகழ்வாகவும் மொழிச் செயற்பாடாகவும் இருப்பதை அறிய முடிகிறது.

சொல்லும் பொருளும்

இருதிணை ஐம்பால் மூவிடம் என்று பெயரிடல் நடைபெற்றுச் சொற்கள் உருவாக்கம் நடைபெற்ற முறையியலைத் தொல்காப்பியர் விரிவாக எடுத்துக் கூறுகின்ற நிலையில் உருவாக்கப்பட்ட பெயர்ச் சொற்கள் வெளிப்படுத்தும் கருத்துப் புலப்பாட்டு நிலையையும் உணர்த்த விரும்புகிறார். இதனை,

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே - தொல். 640

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர் - தொல். 641

தெரிவு வேறு நிலையும் குறிப்பின் தோன்றலும்
இரு பாற்றென்ப பொருண்மை நிலையே - தொல். 642

சொல்லெனப்படுப பெயரே வினையென்று
ஆயிரண்டென்ப அறிந்திசினோரே - தொல். 643

இவற்றின் மூலம் சொல் என்பது பெயரிடல் மூலமும் செயலிடல் மூலமும் உருவாக்கப்படுகிறது என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு பெயரிடும் போது சொல்லும் அதற்கான பொருளும் இணைந்து வெளிப்பட வேண்டும். அதாவது காரண காரியத்துடன் தொடர்புபெற்று வெளிப்பட வேண்டும் என்றும் கூறுகிறார். அவ்வாறு சொல்லின் பொருள் வெளிப்படும்போது வெளிப்படை என்றும் குறிப்பு என்றும் கூறுகிறார். ஆக, பெயரிடல் அனைத்தும் புரிதலுக்கு உட்பட்டு விடுவதில்லை என்பதனையும் அவை குறிப்புத் தன்மை கொண்டும் இருப்பதனையும் உணர முடிகிறது. இதனை மேலும் தெளிவுபடுத்த விரும்பும் தொல்காப்பியர்,

பெயர் எனப்படுபவை தெரியுங்காலை
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ உருவின தோன்றலாறே - தொல். 645

என்பதன் மூலம் சொல்லுக்கான தோற்றுவாய்களைப் பேசிய தொல்காப்பியர், இந்நூற்பாவின் மூலம் சொல் என்றதிலிருந்து பெயர்ந்து பெயர் என்ற நிலையை அடைந்திருக்கும் வளர்ச்சியையும் இதன் மூலம் பெயரிடுதல் என்பதே மொழியின் அடிகட்டுமானமாக இருப்பதையும் உணர முடிகிறது.

தொல்காப்பியர் 'என்மனார் புலவர்' 'அறிந்திசினோரே' என்ற சொற்களைத் தனது 641 மற்றும் 643 ஆகிய நூற்பாக்களில் பயன்படுத்தியிருப்பதன் மூலம் அவர் காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே மொழிக்கட்டமைப்பும் கருத்துக்களை, உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த, பெயரிடலையும் செயலையும் தொழிலையும் குறிக்க வினைச்சொல்லையும் தொடர்ச்சியாக உருவாக்கி இருப்பதையும் பெயரிடல் மரபும் வினைச்சொல் மரபும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்திருப்பதையும் இதன் மூலம் அறிகிறோம். பெயரிடல் மரபு எத்தன்மைத்து என்ற கேள்விக்கும் மொழிக் கட்டமைப்பில் தமிழரின் சிந்தனைக்கும் சான்றாக 640ஆவது நூற்பா விளங்குகிறது. பிற்கால அமைப்பியல் சிந்தனை யாளர்கள் முன்வைக்கும் 'உலகம் மொழியால் உருவாக் கப்பட்டுள்ளது' என்ற கருத்தில் உலகம் - மொழி என்பதில் தொல்காப்பியரின் பொருண்மை - சொன்மை என்ற நூற்பாவினை 641இன் கருத்தோடு இணைத்துப் பார்க்கும்போது சொல் உருவாக்கம் என்பது மிகுந்த சமூகப் பொறுப்போடும் கருத்துச் செறிவோடும் சொல்பவர் - கேட்பவர் - புரிதல் என்ற அடிப்படைத் தேவையோடும் நடைபெற்றுள்ளது என்பதையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் உயர் அறிவியலாகப் பெயரிடல் முறையும் அதனை நடைமுறைப் பயன்பாட்டோடு நிலை நிறுத்தும் முறையுமே முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். அதே வேளையில் பெயர்களுக்கான தேவையும் பொது ஏற்பும் எவ்வாறு நடைபெற்றிருக்கும் என்ற சிந்தனையும் அதற்கான காரண காரியமும் மொழியியல், சமூகவியல் ஆய்வையும் கடின உழைப்பையும் முயற்சியையும் சான்று ஆதாரங்களையும் வேண்டி நிற்கின்றன.

ஆக, தொல்காப்பியர் தனது நூலில் சொல் குறித்தும் சொல்லின் வழியாக அதன் வகைப்பாடாகப் பெயர்ச்சொல் குறித்தும் வினைச்சொல் குறித்தும் தொகுத்துக் கூறுவது என்பது அக்காலகட்டத்தில் பெயரிடல் மரபு என்ற சிந்தனையின் செயற்பாட்டுப் போக்காகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுபெயர்

எ.த.ஜெயரஞ்சித்
(E.T. Jeyaranjith)
B.A(Hons), M.A (தமிழ்), PGDE(Merit),
Dip.in Tamil (கொழும்புத் தமிழ்ச் சங்கம்),
Dip.in School Mgt.(NIE), Dip.in Office Admin.(1st Class),
ஆசிரிய வளவாளர், கல்குடா கல்வி வலயம், வாழைச்சேனை, இலங்கை.

சென்ற இதழில் வந்ததன் தொடர்ச்சி . . .

(ஆ) அளவை ஆகு பெயர்கள்:

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைப் பெயர்கள் ஆகுபெயர்களாக வரும்.

(i) **எண்ணல் அளவையாகு பெயர்:** ஓர் எண்ணல் அளவையின் பெயர் அந்த எண்ணிக்கையில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவையாகு பெயர் எனப்படும். ஒன்று பெற்றால் ஒளி மயம்: இதில் ஒன்று என்னும் எண்ணல் அளவைப் பெயர் அந்த எண்ணுள்ள பொருளுக்கு (குழந்தைக்கு) ஆகி வந்திருப்பதால் எண்ணல் அளவையாகு பெயர் எனப்பட்டது.

வேறு: நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி, அழும் குழந்தைக்கு ஒன்று கொடுப்போம். ஒன்று கொடுத்தால் எல்லாம் சரிவரும், பசி வந்தால் பத்தும் பறந்திடும், ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா, நான் நாலும் தெரிந்தவண்டா.

(ii) **எடுத்தல் அளவையாகு பெயர்: (நிறுத்தல் அளவை ஆகுபெயர்)** எடையைக் குறிப்பது. ஓர் எடுத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவையாகு பெயர் எனப்படும். மூன்று கிலோ வாங்கி வா: இதில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

வேறு: இரண்டு கிலோ வாங்கினேன். சமயலுக்கு இரண்டு கிலோ வாங்கினேன். (இறைச்சி,மீன்), வயலுக்கு ஒரு அந்தர் போதும்.

(iii) **முகத்தல் அளவையாகு பெயர்:** ஒரு முகத்தல் (முகந்து – மொண்டு அளக்கும்) அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் எனப்படும். ஐந்து லீற்றர் வாங்கி வா: இதில் லீற்றர் என்னும் முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

வேறு: விளக்கு எரிய ஒரு லீற்றர் போதும். மூன்று சுண்டு தாருங்கள் (கச்சான், அரிசி, நாவற்பழம்), மதியத்துக்கு ஒரு கொத்துப் போதும்.

(iv) **நீட்டல் அளவையாகு பெயர்:** ஒரு நீட்டல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும். இரண்டு மீற்றர் கொடுங்கள்: இதில் மீற்றர் என்னும் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

வேறு: உடுப்பது நான்கு முழம், கட்டுவது எட்டு முழம், சட்டைக்கு இரண்டு மீற்றர் கிழியுங்கள் (துணி), சாண் ஏற முழம் சறுக்கும், இரண்டு பாகம் வீதிக்கு விட்டுக்கொடுத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஏனைய ஆகு பெயர்கள்:

(i) சொல்லாகு பெயர்: சொல்லைக் குறிக்கும் பெயர் சொல்லுடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் எனப்படும். இந்த உரை எனக்கு மனப்பாடம்: இதில் உரை என்னும் சொல், அச்சொல்லின் பொருள் அமைந்த நூலுக்கு ஆகி வந்துள்ளது.

வேறு: நண்பன் என் சொல்லைக் கேட்பான். இந்தப் பாட்டு நல்லது(பொருள், இசை), வள்ளுவன் சொல் கேள், ஆசிரியரின் சொற் கேட்டான், இந்தப் பாட்டு விளங்கவில்லை.

(ii) தானியாகு பெயர்: ஓர் இடத்தில் உள்ள பொருளின் பெயர் (தானி) அது சார்ந்திருக்கும் இடத்திற்கு (தானத்திற்கு) ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும். அடுப்பிலிருந்து பாலை இறக்கு: இதில் பால் என்பது அது சார்ந்திருக்கும் பாத்திரத்தைக் குறிக்கிறது. பாலை இறக்கு என்றால் பால் இருக்கும் பாத்திரத்தை இறக்கு என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

வேறு: அடுப்பிலிருந்து சோற்றை இறக்கு. மீனைக் கூப்பிடு(விற்பனையாளர்),பாணை நிற்பாட்டு, ஏரி உடைந்தது, விளக்கு முறிந்தது. இளநீர் வெட்டினான், வீட்டைக் கவனமாய்ப் பூட்டிவை, கதைவைக் கொழுவிச் செல்லுங்கள்.

தானியாகு பெயர்: ஓரிடத்திலுள்ள பொருள் அவ்விடத்திற்கு ஆகிவருவது.
இடவாகுபெயர்: ஓர் இடப்பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது.

(iii) கருவியாகு பெயர்: ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆகும் பொருளுக்கு ஆகிவருவது கருவியாகு பெயர் எனப்படும். நான் குறள் படித்தேன்: இதில் குறள் என்பது குறள் வெண்பாவைக் குறிக்கும் சொல். ஆனால் இங்கே குறள் வெண்பாவால் ஆக்கப்பட்ட பாக்களைக் குறிக்கிறது.

வேறு: வானெலி கேட்டு மகிழ்ந்தனர், குழல் இனிது(இசை), தொலைக்காட்சி பார்த்தான், மு.வ.வின் எழுத்துக்கள் பொருள் பொதிந்தவை

(iv) காரியவாகு பெயர்: ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு) ஆகி வந்தால் காரியவாகு பெயர் எனப்படும். நான் அலங்காரம் கற்றேன்: இதில் அலங்காரம் என்னும் சொல் அலங்காரத்தைக் (அணியை) கற்பிக்கும் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

வேறு: எழுத்தாளர் தரமான இலக்கியம் படைக்க வேண்டும். அறம் பாடிற்று(அறநூல்கள்), உழவு ஓட்டினான், அறிவியல் கற்றேன், கணிதம் படித்தேன், பௌதிகம் வாங்கினான்.

(v) கருத்தாவாகு பெயர்: ஒரு கருத்தாவின் பெயர் அக்கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகிவருவது கருத்தாவாகு பெயர் எனப்படும். இவருக்கு வள்ளுவர் மனப்பாடம்: இதில் வள்ளுவர் என்னும் சொல் வள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

வேறு: கம்பனைக் கற்றேன். கல்கி படித்தேன்(சஞ்சிகை), அறிஞர் அண்ணாவைக் கற்றிருக்கிறேன்.

(vi) உவமையாகு பெயர்: ஓர் உவமையின் பெயர் அதனால் உணர்த்தப்பெறும் உவமேயத்திற்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும். காளை வந்தான்: இதில் காளை என்னும் சொல், காளை போன்ற வீரனுக்கு ஆகிவந்துள்ளது. காளை - உவமை, வீரன் - பொருள்

வேறு: குயில் பாடினாள், புலி வந்தான், சிங்கம் வந்தான், நாரதர் வருகிறார்.

(vii) இருமடியாகு பெயர்: ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய இரண்டு பொருள்களைக் குறிப்பால் உணர்த்தி ஒரு பொருள் பெறப்படுவதாகும். புளி நட்டான்(பழம், மரம்), வீட்டைப் பூட்டினேன்(கதவு, பூட்டு)

(viii) மும்மடியாகு பெயர் :ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மூன்று பொருள்களைக் குறிப்பால் உணர்த்தி ஒரு பொருள் பெறப்படுவதாகும். கார் அறுத்தான், கார் விளைந்தது: மேகம் - மழை - நெல்.

ஆகுபெயர்கள் பல்கிப் பெருகிக் காலத்துக்குக்காலம் வளர்ச்சி பெற்று அதிகரித்த வண்ணமே உள்ளன.பழந்தமிழ் இலக்கணகாரர் வகைப்படுத்திய வகைகளுக்கப்பால் இன்று பலவிதமானவை தோன்றியுள்ளன. அவற்றை அறிந்து பழையனவற்றைக் கழிக்காமல் புதியனவற்றை ஆர்வத்தோடு ஏற்று மொழியை வளப்படுத்துவோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரப்பெயர்ப் புணர்ச்சிக் கோட்பாடுகள்

க. தேவிபாலா
(K. Devibala)
உதவிப் பேராசிரியர்
முதுகலைத் தமிழாய்வுத் துறை,
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி,
வாணியம்பாடி, திருப்பத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இணைவதைப் புணர்ச்சி என்பர். தமிழில் உள்ள இலக்கண நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல் போன்ற நூல்கள் புணர்ச்சிக் கோட்பாடுகளை எழுத்ததிகாரத்தில் விளக்குகின்றன. அப்புணர்ச்சிக் கோட்பாடுகளில் மரப்பெயர்கள் அதிகமாகப் பயின்று வருகின்றன.

மேற்கூறிய நூல்கள் கூறும் மரப்பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நூல்கள் - மரப்பெயர்கள்

1. **தொல்காப்பியம்:** யா, பிடா, தளா, மா, உதி, புளி, ஒடு, சே, விசை, ஞெமை, நமை, பனை, அரை, ஆவிரை, ஆண், இல்லம், எகின், வெதிர், சார், ஆர், பீர், குமிழ்.
2. **முத்துவீரியம்:** யா, பிடா, தளா, உதி, புளி, ஒடு, சே, விசை, ஞெமை, நமை, பனை, அரை, ஆவிரை, ஆண், இல்லம், எகின், வெதிர், சார், ஆர், பீர்.
3. **நன்னூல், தொன்னூல் விளக்கம்:** எகின்
4. **இலக்கண விளக்கம்:** பனை
5. **வீரசோழியம், நேமிநாதம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல்:** இல்லை

மரப்பெயர்ப் புணர்ச்சி

மரப்பெயர்கள் பொதுவாக மற்றப் பெயர்களுடன் புணர்கையில்,

"மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே"
(தொல்.218)

"யாவும் பிடாவுந் தளாவு மெலி மிகும்"
(முத்து. 254)

என்னும் நூற்பாக்கள் மூலம் மெல்லெழுத்து (அரைங்கோடு) பெற்றுப் புணரும் என்பதை அறியமுடிகிறது. சில மரப்பெயர்கள் (யாஅக்கோடு) வல்லெழுத்துப் பெற்றும் புணருகின்றது. மரப்பெயர்கள் அதன் புணர்ச்சியோடு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

(1)



(வேற்றுமை வழி) இம்மூன்றும் 'அ'கரச் சாரியை பெற்றுப் புணருகின்றன.

(2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடு, சே, ஆண், எகின் + கோடு (அம்) →

ஒடுஅங்கோடு (தொல். 242, முத்து 275)
சேஅங்கோடு (தொல். 275, முத்து 284)
ஆணங்கோடு (தொல். 305, முத்து 306)
எகினங்கோடு (தொல். 337, முத்து 326) (தொன்.விளக். 25, நன். 215)

(வேற்றுமை வழி) இவைகள் அனைத்தும் 'அம்' சாரியை பெற்றுப் புணர்ந்துள்ளன. சே மரக் கிளவி இன் சாரியை பெற்றும் புணருகின்றது. எகின் மரப்பெயரை மட்டும் தொன்னூல்விளக்கம் கூறியுள்ளது. "எகின் மரம் அல்லதே இருவழி இயல்பு" (தொன். விளக். 25) இதன்படி எகின் மரம் வேற்றுமை மற்றும் அல்வழி இரண்டிலும் இயல்பாகப் புணர்கிறது.

இல்லம் + கோடு = இல்லங்கோடு (தொல். 306, முத்து. 314)

விசை, ஞெமை, நமை + கோடு →

விசைங்கோடு (தொல். 283, முத்து 286)
ஞெமைங்கோடு (தொல். 283, முத்து 286)
நமைங்கோடு (தொல். 283, முத்து 286)

(மெல்லொற்று மட்டும் பெற்றுப் புணர்ந்துள்ளது)

பனை + காய் = பனங்காய் (தொல். 284, இலக் விளக். 84)

பனை + கொடி = பனைக்கொடி (இலக். விளக். 84)
(வல்லொற்றுப் பெற்றுப் புணர்ந்துள்ளது)

அரை, ஆவிரை 'அம்' சாரியை பெறும் என்றும் (தொல்.284, முத்து. 287) வெதிர், பீர், சார், ஆர் என்பனவும் 'அம்' சாரியை பெறும் என்றும் (தொல். 364, முத்து. 347) நூல்கள் கூறுகின்றன. ஆல் வேல், பூல் போன்ற மரப்பெயர்களும் 'அம்' சாரியை பெறும் என்று (தொல்.376, முத்து. 349) கூறுகின்றன.

குமிழ் என்ற மரப்பெயர்ப் புணர்ச்சியைத் தொல்காப்பியம் (387) மட்டும் கூறியுள்ளது; மற்ற நூல்களில் கூறப்படவில்லை.

பனை முன் 'அட்டு' புணரும் விதியில் மட்டும் தொல்காப்பியத்தில் இருந்து மற்ற நூல்கள் மாறுபட்டுள்ளன.

பனை முன் அட்டு விதி

பனை என்பது நிலைமொழியாக நிற்க அட்டு வருமொழியாக வந்து புணர்வதைத் தொல்காப்பியர்,

"பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகும் ஐயென் உயிரே
ஈகாரம் வருதல் ஆவயினான" (தொல். 285)

என்று கூறியுள்ளார். இதன்படி

பனை (ன் + ஐ) + அட்டு ('ஐ'காரம் அழிந்தது)

பன் + ஆ + அட்டு = பனாஅட்டு ('ஆ'காரம் தோன்றியது) என்றாயிற்று.

உடம்படுமெய் விதியினைப் பொருத்திப் பார்க்கும்போது பனாவட்டு என்று புணர்ந்திருக்க வேண்டியது உடம்படுமெய் இல்லாமல் பனாஅட்டு என்று குறிப்பிடுகின்றார். இதற்குக் காரணம் (பனா) ஆகார ஈற்றும் அட்டு என்பதின் முதல் அகரமும் பொருந்தி வராத நிலை ஆகும். அதாவது உச்சரிப்பில் எழுத்தின் பிறப்பு அடிப்படையில் மாறுபாடு தோன்றுகிறது.

வகர மெய்யெழுத்தை உச்சரிக்கும்போது பல் இதழ் இயைந்து ஒலிக்கிறது. இதனோடு மற்ற உயிர்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய எழுத்துகளில் உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன மட்டும் உச்சரிப்பில் உதடு குவிகிறது. ஆக இந்த ஐந்தெழுத்தின் பிறப்பிடங்களுக்கும் வகரமெய் பிறப்பிடமும் ஒத்துள்ளது. ஆனால் எ, ஏ,அ,ஆ என்பவற்றிற்கு வகர மெய் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. இதனை "அகர ஆகாரம் வாய்திறப்ப பிறத்தலான் யகர வகரத்தின் ஏற்புடைய உடம்படுமெய் தோற்றத்தைத் தவிர்த்து தொல்காப்பியர் கையாண் டுள்ளார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வெங்கடராமன் கா. கோ, தொல்காப்பியத்தமிழ், ப. 117) இதனை,

"அகர ஆகாரம் வரூஉம் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே"
(தொல்.311)

என்பதிலிருந்து அறியலாம். இந்நூற்பா பனா அட்டு என்பதற்கும் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. தொல்காப்பியர் நிலைமொழியின் ஈற்றெழுத்தினைக் கருத்தில் கொண்டு விதிகள் அமைத்திருக்கிறார். இலக்கண விளக்கமும் தொல்காப்பியத்தை ஒட்டிக் கூறியுள்ளது.

நன்னூலார் பனைமுன் அட்டு புணர்வதில் வருமொழியின் முதலெழுத்தினை அடிப்படையாகக் கொண்டு விதி அமைத்திருக்கிறார். இதனை

"அட்டுவரின் ஐகெட்டுஅந் நீள்வுமாம் வேற்றுமை"
(நன். 203)

என்னும் நூற்பா வழி அறியலாம். இதன்படி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை + அட்டு = பன் + அட்டு => ஆட்டு = பனாட்டு (நன்.203) என்று புணருகிறது. இதில் தொல்காப்பியர் கூறியமைக்கும் நன்னூலார் கூறியமைக்கும் உள்ள வேறுபாட்டினை உணர முடிகிறது.

'பனாஅட்டு' 'பனாட்டு' என்பதில் பனாஅட்டு என்பதே சரியானதாகத் தோன்றுகிறது. ஏனெனில் பனாட்டு என்பதனைப் பிரிக்கும்போது பனை ஆட்டு என்ற பொருளில் மாறுபாடு ஏற்பட்டு இனிப்புப் பொருளைக் குறிக்க வேண்டிய சொல் பனையை ஆட்டு என்றாற்போல் பொருள் உணர்த்துகிறது.

பெரும்பாலும் மரப்பெயர்கள் வேற்றுமை வழியில் மெல்லொற்றுப் பெற்றும் 'அம்' சாரியை பெற்றும் புணருகின்றன. தொல்காப்பியம் கூறிய அனைத்து மரப்பெயர்களையும் (குமிழ் தவிர்த்து) முத்துவீரியம் புணர்ச்சியிலும் பெயர்களிலும் மாறுபாடுகள் இல்லாமல் கூறியுள்ளது. நன்னூல் மரப்பெயர்களுக்கு மெல்லெழுத்தும் 'அம்' சாரியையும் பொது என்பதால் மரப்பெயர்களைக் (பனை தவிர்த்து) கூறவில்லை. சில மரப்பெயர்கள் வல்லொற்றுப் பெற்றுப் புணர்ந்தாலும் மெல்லொற்றுப் புணர்ந்து அமைவதே பொருத்தமுடையதாக உள்ளன.

உதவிய நூல்கள்:

1. இளவழகன். கோ., (இளம்பூரணர் உரை), தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தமிழ் மண் பதிப்பகம், சென்னை – 600 017, முதற்பதிப்பு 2003.

2. இளவரசு, சோ., நன்னூல் விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு 1981, மறுபதிப்பு 1990.

3. சண்முகம். செ. வை., சுவாமி நாதம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், முதற்பதிப்பு 1975.

4. சரவணத்தமிழன். த., தமிணூல், தமிழன் பதிப்பகம், இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர், முதற்பதிப்பு 2003.

5. சாந்தலிங்கம் இராமசாமி. அ., அறுவகை இலக்கணம், பேரூராதீனம், பேரூர், முதற்பதிப்பு 1978.

6. சீனிவாசனார், ச., நேமிநாதம், அருள்வேல் பதிப்பகம், பழவந்தாங்கல், சென்னை, முதற்பதிப்பு 2004.

7. சுப்பிரமணியன் ச.வே., தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1978.

8. தாமோதிரன் சி. வை, வீரசோழியம் (பெருந்தேவனார் உரை), இன்டர்நேஷனல் தமிழ் பதிப்பகம்,

9. புலவர் சேயொளி, இலக்கண விளக்கம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 11, முதற்பதிப்பு 1976.

10. புல்னே அன்டி, முத்துவீரியம், (திருப்பாற்கடனாதன் கவிராயர் உரை), அல்பினியன் பிரஸ், பதிப்பு 1889.

புணர்ச்சி – சிறப்பு விதி

01. ஒன்று	+	ஆயிரம்	=	ஓராயிரம்
02. இரண்டு	+	ஆயிரம்	=	ஈராயிரம்
03. மூன்று	+	ஆயிரம்	=	மூவாயிரம்
04. நான்கு	+	ஆயிரம்	=	நாலாயிரம்
05. ஐந்து	+	ஆயிரம்	=	ஐயாயிரம்
06. ஆறு	+	ஆயிரம்	=	ஆறாயிரம்
07. ஏழு	+	ஆயிரம்	=	ஏழாயிரம்
08. எட்டு	+	ஆயிரம்	=	எண்ணாயிரம்
09. ஒன்பது	+	ஆயிரம்	=	ஒன்பதினாயிரம்
10. பத்து	+	ஆயிரம்	=	பதினாயிரம்
11. பத்து	+	ஒன்று	=	பதினொன்று
12. பத்து	+	இரண்டு	=	பன்னிரண்டு
13. பத்து	+	மூன்று	=	பதின்மூன்று
14. பத்து	+	நான்கு	=	பதினான்கு
15. பத்து	+	ஐந்து	=	பதினைந்து
16. பத்து	+	ஆறு	=	பதினாறு
17. பத்து	+	ஏழு	=	பதினேழு
18. பத்து	+	எட்டு	=	பதினெட்டு
19. ஒன்று	+	பத்து	=	ஒருபது
20. இரண்டு	+	பத்து	=	இருபது
21. மூன்று	+	பத்து	=	முப்பது
22. நான்கு	+	பத்து	=	நாற்பது
23. ஐந்து	+	பத்து	=	ஐம்பது
24. ஆறு	+	பத்து	=	அறுபது
25. ஏழு	+	பத்து	=	எழுபது
26. எட்டு	+	பத்து	=	எண்பது
27. ஒன்பது	+	பத்து	=	தொண்ணூறு
28. ஒன்பது	+	நூறு	=	தொள்ளாயிரம்

தொகுப்பு:
சீ.செந்தில்ராஜ்,
(S.Senthilraj)
ஆசிரியர், மட் /ஆரையம்பதி மகா வித்தியாலயம்,
மட்டக்களப்பு, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்தமிழ் கூறும் மொழியிலக்கணமும் உயிரிலக்கணமும்

முனைவர் வேல்மணி கார்த்திக்
(Dr. Velmani Karthick)
தொகுப்பாளர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்துக்கும் இலக்கணம் கண்ட மொழி, தமிழ். இலக்கணம் மொழிக்கானது என்றால், மொழி மக்களுக்கானது. எனவே இலக்கணம் என்பது வெறும் எழுத்துக்கானது - சொல்லுக்கானது மட்டுமல்ல; பொருள் பொதிந்த பொருளுக்குமானது. இங்கு, பொருள் என்பது அகமும் புறமும் இணைந்த வாழ்க்கை. தமிழின் தொன்மையையும் ஒழுங்கமைந்த மேன்மையையும் ஒருங்கே பறைசாற்றும் தொல்காப்பியம், மொழிக்கான இலக்கணத்தை மொழியும் போது உயிருக்கான இலக்கணத்தையும் இடையிடையே இழையோடவிட்டிருக்கிற விந்தையைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் திருக்குறள் மெய்ப்பொருளிய லுரையில் விளக்கியுள்ளார். வியப்புரையாக அமைந்த அந்த விளக்கவுரைச் செய்திகள் இங்கு எடுத்தாளப்படுகின்றன.

எழுத்திலக்கணத்தில் உயிரிலக்கணம்:

“மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்” (தொல்.46)

இந்நூற்பாவில் அகரம் என்பது உயிர் என்று பொருள்படும். அதாவது, மெய்யெழுத்துகள் அனைத்தும் உயிரெழுத்துகளுடன் பொருந்தியே ஒலிக்கும்.

க் + அ = க, க் + ஆ = கா

அதுபோல், அனைத்து உயிர்மெய்களிலும் இறைவனாகிய (இயற்கையாகிய) அகரம் பொருந்தியிருக்கிறது.

“உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா” (தொல்.60)

அதாவது, சொற்களின் முன் மெய்யெழுத்துகள் மட்டும் தனித்து வருவதில்லை.

அதுபோல், உயிரற்ற வெற்றுடம்புகள் இயங்குவதில்லை.

“மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே” (தொல்.18)

அதாவது, உயிருள்ள ஓர் உடம்பில் உயிர் தெரிவதில்லை. உடல் மட்டும்தான் தெரிகிறது. ஆனால் அதில் உயிரும் கலந்திருக்கிறது. எதைப் போலென்றால், உயிர்மெய் எழுத்தில் உயிர் கலந்திருப்பதைப் போல. அத்துடன், முதலில் தெரிவது உடல். அந்த உடலில் உயிர் கலந்திருப்பது அந்த உடல் இயங்குவதிலிருந்தே பின்னர் தெரியும். எதைப்போலென்றால், உயிர்மெய் எழுத்தில் முதலில் தெரிவதும் ஒலிப்பதும் மெய்யெழுத்தே. உயிரெழுத்து அதன் பின்தான் ஒலிக்கும். ஆனால் காட்சிக்குத் தெரியாது. ச் + அ = ச

“மெய்யொடு இயையினும் உயிரியல் திரியா” (தொல்.10)

அதாவது, மெய்யெழுத்தோடு உயிரெழுத்துச் சேர்ந்து ஒலிப்பினும் உயிர் ஒலிப்பில் மாற்றம் ஏற்படுவதில்லை. “ம” என்று ஒலிக்கும்போது முற்றொலியாக வரும் அந்த “அ” ஒலி கெடுவதுமில்லை; மாற்றம் அடைவதும் இல்லை. அதுபோல், உடம்பொடு உயிர் இயங்கினாலும் அந்த உயிர்க்கு முன்னரே உள்ள தன்மைகள் (அறிவு, மன, குண நிலைகள்) வேறுபடுவ தில்லை.

ஒருவன் இயற்கையாகவே அறிவு நுட்பத்துடனும் நல்ல மன, குணங்களுடனும் இயங்குவதும் பிறிதொருவன் அறிவு முட்டுப்பாட்டுடனும் தீய மன, குணங்களுடனும் இயங்குவதும் இதனால்தான். இவை பிறப்புச் சூழலாலோ வளர்ப்புச் சூழலாலோ வாழ்க்கைச் சூழலாலோ ஏற்படுவதில்லை. பிறவியிலேயே உயிர்க்குள்ள உணர்வும் குணமும் ஆகும். அதனாலேதான்,

“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்

“உண்மை அறிவே மிகும்” (373)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" (667)

"எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்

வேறாகும் மாந்தர் பலர்" (514) என்று வள்ளுவரும்

"நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்" என்று

ஔவையாரும் குறிப்பிட்டுள்ளனர்.

"பன்னீர் உயிரும் தந்நிலை திரியா" (தொல்.84)

அதாவது, உயிரெழுத்துகள் பன்னிரண்டும் தனித்து இயங்கினாலும் மெய்யெழுத்துகளோடு எந்த நிலையில் இயங்கினாலும் தம் இயல்புத் தன்மையிலிருந்து திரிபடைவதில்லை. அதுபோலவே, உயிர்கள் எந்த உடம்பில் வந்து பொருந்தி இயங்கினாலும் உயிர்க்கு உண்டான இயல்புத் தன்மையிலிருந்து அவை மாறுபடுவதில்லை.

"மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும்" (தொல்.139)

அதாவது, மெய்யெழுத்தை (உயிர்மெய்) விட்டு உயிரெழுத்தை நீக்கிவிட்டால் மீண்டும் அதன் இயல்பான உருவையும் ஒலியையும் பெறும்:

எ - டு: ஆலிலை = ஆல் + இலை

அதுபோல், உடம்பினின்று உயிர் நீங்கிவிட்டால் இயல்பாக அது தன்னிலையில் நிற்கும்.

"புள்ளி யீற்றுமுன் உயிர்தனித்து இயலாது

மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே" (தொல்.138)

அதாவது, மெய்யெழுத்தோடு உயிரெழுத்து இணைவதுபோல், தனியே இயங்கிக்கொண்டிருக்கும் உயிர், பிறவியை விரும்பித் தனக்கோர் உடலைத்தேடி அதனோடு பொருந்தி வாழ்கிறது. இதனைத்தான்,

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவ தியல்பே" (நன். 204)

என்றார் பவணந்தியார்.

சொல்லிலக்கணமும் உயிரிலக்கணமும்:

"வினை யெனப்படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலை காலமொடு தோன்றும்" (தொல்.683)

அதாவது, வினைச்சொல்லானது வேற்றுமை யுருபை ஏற்காது. ஆராயுமிடத்துக் காலத்தைக் காட்டி நிற்கும். அதுபோல, உயிரின் வினைப்பயனானது இவர் வேண்டியவர் - வேண்டாதவர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற எவ்வகை வேறுபாடும் கொள்ளாது, உரிய காலத்தில் உயிரை வந்தடையும்.

மேற்குறித்த செய்திகளைப் போன்று தமிழ் மொழியின் சொல் வளத்தையும் பொருளாழத்தையும் பறைசாற்றும் பல அரிய அறிவுப் புதையல்கள் தொன்மைமிகு தொல்காப்பியத்தில் விரவிக் கிடக்கின்றன. அவற்றை உணர்ந்து வெளிக்கொணர்ந்து விளக்க வேண்டியது தமிழரின் கடமை. அது தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை. ■

இலக்கண நூல்கள் கூறும் உவமை உருபுகள்

தொல்காப்பியம்: அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, என்ன, மான, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, வென்ற, வியப்ப, எள்ள, விழைய, இறப்ப, நிகர்ப்ப, கள்ள, கடுப்ப, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொருவ, பொற்ப, போல, வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, புரைய.

தண்டியலங்காரம்: போல, மான, புரைய, பொருவ, நேர, கடுப்ப, நிகர, நிகர்ப்ப, ஏர, ஏய, மலைய, இயைய, ஒப்ப, எள்ள, உறழ, ஏற்ப, அன்ன, அனைய, அமர, வாங்க, என்ன, இகல, இழைய, எதிர, துணை, தூக்கு, ஆண்டு, ஈங்கு, மிகுதகை, வீழ, இணை, சிவண், கேழ், அற்று, செத்து.

நன்னூல்: போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன.

தொகுப்பு:
ப. மதியழகன்
(P. Mathiyalakan)
ஆசிரியர், மட் /சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த (உயர் தரம்) - தமிழ்

 அன்புள்ள மாணவர்களே,

எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். 1-12 வரையுள்ள வினாக்களுள் ஒரு வினா ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகளைக் கொண்டுள்ளது. அவ்வினாவின் இலக்கம், அவ்வினாவின் ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஆகியவற்றை மட்டும் இச்சஞ்சிகையின் முகவரிக்கு **10.03.2024**க்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவையுங்கள். முதல் மூவருக்குத் தக்க பரிசில் வழங்கப்படும். பாடசாலையின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக. (ஆ-ர்)

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் இதழ்குவி எழுத்துக்கள்
(1) உ, ஐ (2) ஒ, ஔ (3) ஔ, ஐ (4) இ, சி (5) கு, செ (.........)

1.2 பின்வருவனவற்றுள் ***இதழ்குவியா*** எழுத்துக்கள்
(1) ஆ, ஐ (2) உ, சொ (3) ஊ, மொ (4) ஒ, ஓ (5) கோ, தோ (.........)

1.3 பின்வருவனவற்றுள் முன்னுயிர் எழுத்துக்கள்
(1) உ, ஊ (2) ஐ, ஓ (3) மே, கூ (4) இ, ஏ (5) ஈ, ஓ (.........)

1.4 பின்வருவனவற்றுள் பின்னுயிர் எழுத்துக்கள்
(1) உ, ஏ (2) எ, ஏ (3) உ, ஓ (4) சி, மீ (5) அ, ஆ (.........)

1.5 பின்வருவனவற்றுள் கூட்டுயிர் எழுத்துக்கள்
(1) மூ, றூ (2) அ, ரி (3) ஊ, ஔ (4) அ, ஓ (5) ஔ, ஐ (.........)

1.6 பின்வருவனவற்றுள் மேலுயிர் எழுத்துக்கள்
(1) இ, உ (2) எ, ஏ (3) அ, ஆ (4) ஒ, ஓ (5) ஏ, ஓ (.........)

1.7 பின்வருவனவற்றுள் கீழுயிர் எழுத்துக்களாகவும் இடையுயிர் எழுத்துக்களாகவும் வரும் எழுத்துக்கள்
(1) உ, ஊ (2) அ, ஆ (3) மா, கோ (4) வே, சே (5) ஒ, ஓ (.........)

1.8 பின்வருவனவற்றுள் மேல் முன்னுயிர் எழுத்துக்கள்
(1) ஒ, ஓ (2) எ, ஏ (3) இ, ஈ (4) ஐ, ஊ (5) ஔ, ஊ (.........)

1.9 பின்வருவனவற்றுள் நடு உயிர் எழுத்துக்கள்
(1) ஏ, ஒ (2) உ, ஊ (3) இ, ஈ (4) அ, ஊ (5) எ, ஏ (.........)

1.10 பின்வருவனவற்றுள் இகரம் வேறுபட்டு ஒலிப்பது
(1) திதி (2) திணை (3) திசை (4) இவர் (5) திரி (.........)

1.11 பின்வருவனவற்றுள் ஈகாரம் இடையுயிராய் ஒலிப்பது
(1) மீசை (2) வீணை (3) ஈர்த்தல் (4) ஈச்சை (5) தீர்வை (.........)

1.12 பின்வருவனவற்றுள் எகரம் வேறுபட்டு ஒலிப்பது
(1) தெளி (2) எடு (3) செறிவு (4) மென்மை (5) செழிப்பு (.........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த (சாதாரண தரம்) - தமிழ்மொழியும் இலக்கியமும்

■ *அன்புள்ள மாணவர்களே,*

எல்லா வினாக்களுக்கும் விடையளியுங்கள். (i), (x) ஆகிய வினாக்களுக்குரிய விடையை மட்டும் இச்சஞ்சிகையின் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு தபாலில் 10.03.2024க்கு முன்னர் அனுப்பிவையுங்கள். முதல் மூவருக்குத் தக்க பரிசில் வழங்கப்படும். பாடசாலையின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(i) ஏவா மக்கள் மூவா மருந்து என்று பெரியோர்கள் சொல்வார்கள். இதன் எழுவாயையும் பயனிலையையும் கூறுக.

(ii) அலை மோதும் போதே தலை முழுகு. இதன் எழுவாயையும் பயனிலையையும் கூறுக.

(iii) 'எண்' என்பது பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியம் எழுதுக.

(iv) 'அளி' என்பது பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியம் எழுதுக.

(v) 'பரிச்சயம்' என்னும் சொல்லின் பொருள் புலப்படுமாறு ஒரு வாக்கியம் எழுதுக.

(vi) 'பரீட்சார்த்தம்' என்னும் சொல்லின் பொருள் புலப்படுமாறு ஒரு வாக்கியம் எழுதுக.

(vii) மலர் போலும் திருமேனி. இதில் வந்துள்ள உவமானத்தைக் கூறுக.

(viii) குன்றனைய திருநெடுந்தோள். இதில் வந்துள்ள உவமானத்தைக் கூறுக.

(ix) குன்றனைய திருநெடுந்தோள். இதில் நெடுந்தோள் என்பது என்ன தொகை?

(x) நாலரை மணிக்குப் புறப்பட்டுவிட்டேன். இதில் நாலரை என்பது என்ன தொகை?

(xi) முந்நாள் என்பதைப் பிரித்துக்காட்டுக.

(xii) முன்னாள் என்பதைப் பிரித்துக்காட்டுக.

(xiii) கண்ணனை வீட்டுக்கு அழைத்தார்கள். இவ்வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக எழுதுக.

(xiv) மக்களால் மரங்கள் நாட்டப்பட்டன. இவ்வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாக எழுதுக.

சென்ற இதழில் இடம்பெற்ற வினாக்களுக்கான விடை - க.பொ.த (உயர்தரம்) - தமிழ்

1.1 - **(1)**,	1.2 - **(2), (4)**	1.3 - **(3)**,	1.4 - **(4)**,	1.5 - **(2)**,
1.6 - **(5)**,	1.7 - **(4)**,	1.8 - **(5)**,	1.9 - **(1)**,	1.10 - **(2)**,
1.11 - **(5)**,	1.12 - **(1)**,	1.13 - **(5)**,	1.14 - **(4)**,	1.15 - **(3)**,
1.16 - **(2)**,	1.17 - **(5)**,	1.18 - **(2)**,	1.19 - **(4)**,	1.20 - **(4)**.

குறிப்பு: அறிவுறுத்தலுக்கமைய விடையை எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 772961 571004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 065 2053060